விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 12 திங்கட்கிழமை (25.04.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 127






## புனித பீட்டர் சதுக்கத்தில் பாப்பரசர் பதவியேற்றார்

(வத்திக்கான்)

தேவனின் திருச்சித்தத்திற்கு அமைய கத்தோலிக்க திருச்சபை யினை வழிநடத்துவதே தனது தலையாய கடமையென்று புதிய பாப்பரசர் 16 ஆவது பெனடிக் தெரிவித்துள்ளார்.

கத்தோலிக்க திருச்சபையோடு இணைந்து அதன் தேவைகளுக்கு செவிமடுத்து, தேவனின் வார்த்தை களுக்கும், திருவுளத்திற்கும் அமை வாகத் திருச்சபையினை வழிநடத் தப்போவதாக பரிசுத்த பாப்பரசர் குறிப்பிட்டுள்ளார்.

115 கர்தினால்களால் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாக 265 ஆவது பாப்பரசராகத் தேர்ந்தெடுக் கப்பட்ட ஜேர்மனியைச் சேர்ந்த 78 வயதுடைய கர்தினால் ஜோசப் ரட்சிங்கர் நேற்று பரிசுத்த பாப்பர சர் என்ற பதவியைப் பொறுப்பேற் றுக் கொண்டார்.

வத்திக்கானில் அமைந்துள்ள புனித பீட்டர் சதுக்கத்தில் தனது முதலாவது சம்பிரதாயபூர்வமான திருப்பலியினை ஒப்புக்கொடுத்தன் மூலம் இந்தப் பதவியை ஏற்றுக் கொண்டார்.

சுமார் 5 லட்சம் கத்தோலிக்க விசுவாசிகள் கலந்துகொண்ட திருப்பலியின்போது வழங்கிய பிர சங்கத்தில், கத்தோலிக்க திருச் சபையினை தேவனின் திருவுளத் திற்கு அமைவாக வழிநடத்தப் போவதாக பரிசுத்த பாப்பரசர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு பொதுக் கட்டமைப்பில் பின்னடித்தால் விடுதலைப் புலிகள் தனித் தீர்மானம் எடுப்பர்!


## புலித்தேவன் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

**அரசாங்கம் பொது கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பில் தொடர்ந்தும் பின்னடித்துவருமானால் தமிழீழ விடுதலைப் புலிகள் தனித் தீர்மானமொன்றை எடுக்க வேண்டிய நிலைமை உருவாகும். இவ்வாறு விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

சுனாமி அனர்த்த மீள்கட்டு மானம் புனரமைப்புத் தொடர்பில் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக் கும் இடையே பொதுக்கட்டமைப் பொன்று அவசியமென்பது வலியு றுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இவ்விடயம் குறித்து அரசாங்கம் இதுவரையில் ஆக்க பூர்வமான எந்தவொரு நடவடிக் கையையும் எடுக்கவில்லை.



தென்னலங்கை அரசியலில் பொதுக் கட்டமைப்பு விடயம் குறித்து இன்னமும் முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவும் இல்லை. (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் மகிந்த இன்று ஆஷிமா செல்கின்றார்

(கொழும்பு)

இந்தோனேசியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அங்கு சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஆஷிமா மாநிலத்தை இன்று சென்று பார்வை யிடவுள்ளார்.

அங்கு சுனாமியால் பாதிக்கப் பட்ட பிரதேசங்கள், பாதிக்கப்பட்ட கட்டடங்கள் என்பவற்றின் புனர் வாழ்வு நடவடிக்கைகள், அவற் றின் முன்னேற்றங்கள் குறித்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கருத் துக்களைக் கேட்டறிந்துகொள்ள வுள்ளதாக பிரதமரின் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் கடந்த மூன்று தினங்களாக நடைபெற்ற ஆசிய ஆபிரிக்க மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் இந்தோ னேசியா சென்றமை தெரிந்ததே.

இந்த மாநாடு நேற்று நிறைவு பெற்றது குறிப்பிடத்தக்கது.(இ-08)

## திருமலை இராணுவமுகாம் மீது

## மட்டக்களப்பில் சூடு;

# திருமலை இராணுவமுகாம் மீது நேற்று முன்தினமிரவு தாக்குதல்

## இராணுவப் பேச்சாளர் தயாரட்ணாயக்க

(திருகோணமலை)

திருகோணமலை கட்டைபறிச்சான் இராணுவமுகாம் மீது நேற்று முன்தினமிரவு சிறியரக ஆயுதங்களினால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தயாரட்ணாயக்க தெரிவித்துள்ளார்.

கட்டைபறிச்சான் இராணுவ முகாம் மீது நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கட்டைபறிச்சான் முகாம் அமைந்துள்ள இடத்திலிருந்து 200 மீற்றர் தொலைவில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக படையினர் தம்மிடம் முறைப்பாடு செய்துள்ளதாக கண்காணிப்புக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தொடர்பாக உரிய தகவல்களும், சாட்சிகளும் கிடைக்கும்வரை இதுகுறித்து உறுதியாக எதுவும் கூறமுடியாது. தாக்குதல் சம்பவம் தொடர்பான ஆதாரங்கள் கிடைக்கும் பட்சத்தில் அது யுத்தநிறுத்த மீறலா இல்லையா என்பது குறித்து கருத்துத் தெரிவிக்க முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-08)

# மட்டக்களப்பில் சூடு; நால்வர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாமாங்கம் பார் வீதியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நால்வர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் ஆனைப்பந்தி விநாயகர் ஆலய பரிபாலனசபைத் தலைவர் மதி என அழைக்கப்படும் இராசமாணிக்கம் மதியழகன் (வயது 31) உட்பட சிறைச்சாலை உத்தியோகத்தர் இராஜரட்ணம் இராஜசேகரம் (வயது 42), ரவிச்சந்திரன் சுகன்யா (வயது 12), ஜெகநாதன் நித்தியானந்தனா (வயது 13) ஆகியோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஆனைப்பந்தி விநாயகர் ஆலய வருடாந்த தீர்த்த உற்சவமாகும். பிள்ளையார் ஆலயத்திலிருந்து சுவாமி தீர்த்தமாட மாமாங்கம் விநாயகர் ஆலய தீர்த்தக் குளத்திற்கு சென்றுகொண்டிருந்த சமயம் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-04,09)

# போர்நிறுத்த ஒப்பந்தத்தை புலிகள் சிறப்பாக பேணுகின்றனர்

## சுவிஸ் சுயநிர்ணய அமைப்பு பிரதிநிதி பாராட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மிகவும் சிறந்த முறையில் கடைப்பிடித்து வருகிறார்கள் என்று சுவிஸலாந்தைச் சேர்ந்த அபர்னா கிராஸ் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

சுவிஸ்லாந்தின் ஜெனிவா நகரில் மனிதஉரிமை ஆணைக்குழுவின் 61 ஆவது மாநாடு கடந்த 14 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை நடைபெற்றது. இம்மாநாட்டில் கலந்துகொண்ட சுயநிர்ணய அமைப்பைச் சேர்ந்த அபர்னா கிராஸ் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்மாநாட்டில் இலங்கையிலிருந்து வடக்குக் கிழக்கு மாகாண மனிதஉரிமை செயலகத்தின் பிரதித் (12 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR

your friend in the skies...



யாழ் – கொழும்பு

விமான பயணத்திற்கு அழையுங்கள்:

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888

கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91

Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...




**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## பட்டதாரிகள் வேலை வாய்ப்பு விவகாரம்

## இழுத்தடிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு

உரிய திட்டமிடல் இன்மையாலும், பாரபட்சமான அணுகுமுறை காரணமாகவும் பட்டதாரிகளுக்கு நிரந்தர தொழில்வாய்ப்பு வழங்கும் விவகாரத்தை கூட்டமைப்பு அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்துவருவதாக ஒருங்கிணைந்த பட்டதாரிகள் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. இது தொடர்பாக பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்ட போதிலும் உறுதியளித்தபடி இந்த விவகாரத்தைக் கையாள்வதற்கான அமைச்சரவைக் குழுவொன்றை அமைத்து உறுதியான திட்டமொன்றை வகுக்காமல் அரசாங்கம் இந்த விடயத்தை இழுத்தடித்து வருவதாக அமைப்பின தலைவர் சந்தன சூரியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

42ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரசாங்க நிறுவனங்களில் தொழில் வாய்ப்பை வழங்கியுள்ள அரசாங்கம் மேமாதம் 21ஆம் திகதிக்குள் அவரவருடைய துறைசார்ந்த நிரந்தரத் தொழில்வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவதாகவும் உறுதியளித்திருந்தது.

ஆனால் உறுதியளித்தபடி இதுவரை இதனை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் உரிய முறையில் எடுக்கப்படாததால இது குறித்து பேசுவதற்கு நேரம் ஒதுக்ளகித் தருமாறு பிரதிநிதியமைச்சர் றஞ்சித் சியம்பலா பிட்டியவிற்கு பட்டதாரிகள் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு நேற்று முன்தினம் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது எனத் தெரிவித்தார்.

மார்ச் மாதம் 16 ஆம் திகதிக்குள் எங்களுடைய பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கென அமைச்சரவைக் குழுவொன்றை அமைப்பதாக மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பிரதி நிதியமைச்சர் றஞ்சித் சியம்பலாபிட்டிய, ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக மற்றும் நிதியமைச்சு அதிகாரிகள் ஆகியோர் மார்ச் 10ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பொன்றில் எமக்கு உறுதிமொழி வழங்கியிருந்தனர்.

ஆனால் தற்போது ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும் உருப்படியான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை எனத் தெரிவித்தார்.

தொழில் வாய்ப்புக்கான தகுதிகாண் பரீட்சையையும் மாகாண மட்டத்தில் தொழில்புரிய விரும்புவோரைத் தெரிவுசெய்வதற்கான பரீட்சையையும் கல்வியமைச்சும் மாகாணசபைகளும் ஒரே தினத்தில் நடாத்தவுள்ளதாக அறிவித்திருப்பதால், பட்டதாரிகள் குழப்பமடைந்திருப்பதாகத் தெரிவித்த அவர்,

பெரும்பாலான பட்டதாரிகள் இந்த இரண்டு பிரிவுகளுக்குள்ளும் தொழில்வாய்ப்புப் பெறவிரும்புவதால் இவ்வாறு ஒரே தினத்தில் இரண்டு பரீட்சைகளையும் நடாத்துவதன்மூலம் தொழில் பெறுவதற்கான வாய்ப்பை அவர்கள் இழக்க நேரிடுகிறது எனத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக விரைவில் தம்முடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் என்றும், ஒருங்கிணைந்த பட்டதாரிகள் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் தல்லவர் சூரியாராய்ச்சி மேலும் தெரிவித்தார். (க-4)

## ஒன்றரை நாள் குழந்தை மரணம்; வைத்திய அதிகாரிகளே காரணம்?

### தாயார் உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

பொரளை வைத்தியசாலை அதிகாரிகளின் கவலையீனத்தால் ஒன்றரை நாள் குழந்தை இறந்தமை தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட குழந்தையின் தாயாரே இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறார்.

ஏற்கனவே இதுதொடர்பில் நீதிவான நீதிமன்றத்திலும் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

அதன் அடிப்படையில் குழந்தை இறப்பதற்குக் காரணமாக இருந்த அதிகாரிகளை நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்த உத்தரவின்படி சந்தேகநபரை கைதுசெய்யுமாறு கோரி குறிப்பிட்ட தாயினால் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.(க-5)

## நிதியுதவிகள் கிடைத்தபோதும் காணிகளைப் பெறமுடியாதநிலை

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்களைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான நூற்றிஎண்பது கோடி டொலர் நிதி உதவியில் பெருமளவு தொகை இலங்கைக்குக் கிடைத்திருக்கிறது.

ஆனால் பாதிப்புற்றோரை மீளக் குடியமர்த்துவதற்குத் தேவையான காணிகளைப் பெறுவதில் பல பிரச்சினைகள் எழுந்திருப்பதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் மீளமைப்பு பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் சுரேன் ஹெலகொட தெரிவித்திருக்கின்றார்.

சில பிரதேசங்களில் அரசாங்கம் சுவீகரிக்க விரும்பும் காணிகளைக் கொள்வனவு செய்ய முடியாமல் இருக்கின்றது.

வேறு இடங்களில் பௌதீகவியல் அமைப்பு முட்டுக்கட்டையாக அமைந்திருக்கின்றது.

சுனாமியால் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட கிழக்குப் பிரதேசங்களில் கடல்நீர் ஏரிகள் கூடுதலாகக் காணப்படுகின்றன.

இடம்பெயர்ந்த மக்கள் வாழ்ந்த பிரதேசத்திற்கு அருகிலேயே காணிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையாகும்.

ஆனால் கடல் நீரேரிகள் களப்புகள் போன்றவை காரணமாக வீடுகளை அமைப்பதற்கு போதியளவு காணிகளைப் பெறுவது கடினமான காரியமாக மாறியிருக்கின்றது.

அரசாங்கத்தின் சுனாமி புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் அறுபதாயிரம் நிரந்தர வீடுகளை அமைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

இவற்றுள் சுமார் முப்பதாயிரம் வீடுகளை அமைப்பதற்குத் தேவையான காணிகள் சுவீகரிக்கப்பட்டிருக்கின்றன என்றார். (க-5)

## பாதிப்புற்ற மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

### ஜேர்மன் நாட்டு நிறுவனம் அன்பளிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் உளவள மேம்பாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஜேர்மன் நாட்டு அரச சார்பற்ற நிறுவனமொன்று விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இவர்களின் கல்வி மேம்பாட்டிற காக வழங்கப்பட்டுள்ள இந்த உபகரணங்கள் வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் வைத்து கல்வியமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இவ் உபகரணங்கள் சுனாமி அனர்த்தததினால் பெரிதும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, வடமராட்சி, மட்டக்களப்பு,கல்முனை,அக்கரைப் பறறு பிரதேச மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்குப் பயன்படுத்தப்படுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 3.1 மில்லியன் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும ஆரம்பக்கல்வி உபகரணங்களுமே இவ்வாறு கையளிக்கப்படடுள்ளவையாகும். (க-9)

## கல்விக்கான பிரசார வாரம்

(கொழும்பு)

கல்விக்கான பிரசார வாரமாக பரிடோ நிறுவனம் நாளை செவ்வாய்க்கிழமை முதல் மே மாதம் இரண்டாம் திகதி வரையிலான காலப் பகுதியினைப் பிரகடனம் செய்துள்ளது.

இதன்போது இலவசப் பாடப்புத்தக விநியோகத்தில் தாமதம் மற்றும ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் கொடுப்பனவு மறுக்கப்படுதல் போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளன. (க-4)

## இராசி பலன்

**25.04.2005**
**(சித்திரை12 ,திங்கட்கிழமை)**
**பிரதமை பிற்பகல் 03-07 மணிவரை**
**சுவாதி முற்பகல் 09.05 மணிவரை**
**இராகுகாலம் 07.30 -09.00 மணிவரை**
**சுபநேரம் 12.00- 01.30 மணிவரை**
**அமிர்தம்**

| | |
|---|---|
| மேடம் | எடுத்த கருமங்கள் கைகூடும், பெருமையடைதல், போசன சுகம், பிரயாணம். |
| இடபம் | சத்துரு ஜெயம், சுப நிகழ்வு, தொழிலில் ஆர்வம், மன மகிழ்ச்சி. |
| மிதுனம் | உடல் நலக்குறைவு, உறவினர் வெறுப்பு, காரிய தாமதம், வேலைச்சுமை. |
| கடகம் | தாய் வழி உறவு, அபகீர்த்தி, மனச்சோர்வு, முயற்சி தாமதம். |
| சிங்கம் | கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, போசன சுகம், நல்ல செய்தி. |
| கன்னி | நண்பர்கள் மனஸ்தாபம், ஆரோக்கியக் குறைவு, பணவிரயம், காரியதாமதம். |
| துலாம் | தெய்வ சிந்தை, நல்ல முயற்சி, பிரயாணம், மேன்மை. |
| விருச்சிகம் | புதியதிருப்பம், காரிய அலைச்சல், எதிர்பாராத நன்மை, சுப செலவு. |
| தனுசு | சகோதரர் உதவி, கீர்த்தி, எடுத்த கருமங்கள் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி. |
| மகரம் | தூரதேசச் செய்தி, அதிகாரம், நண்பர்கள் உதவி, தொழில் நன்மை. |
| கும்பம் | புதிய திட்டமிடல், பிரயாணம், வீண் பயம், முயற்சி தாமதம். |
| மீனம் | திருடர் பயம், காரியதடங்கல், திடீர் நன்மை, போசன சுகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

—வளவன்

## சுனாமி அச்சுறுத்தல் குறித்து இந்தியா 30 நிமிடத்தில் இலங்கைக்கு அறிவிக்கும்

(கொழும்பு)

இந்து சமுத்திரத்தில் நிலவும் சுனாமி அச்சுறுத்தல் குறித்து அரை மணித்தியாலத்தில் இலங்கைக்கு அறிவிக்க இந்தியா இணங்கியுள்ளதாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அண்மையில் மொறீஸியஸ் நாட்டில் நடைபெற்ற "இந்து சமுத்திரத்தில் சுனாமி அபாயம்" குறித்து அறிவிக்கும் கட்டமைப்பை அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தையிலேயே இந்தியா இந்த இணக்கத்தைத் தெரிவித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே பேராசிரியர் திஸ்ஸ விதாரண இவ்வாறு தெரிவித்தார்.

புவியதிர்ச்சி ஒன்று ஏற்பட்டு அரை மணித்தியாலத்திற்குள் அது தொடர்பாகவும் அதன் அச்சுறுத்தல் தொடர்பாகவும் சகல தகவல்களையும் இலங்கைக்கு வழங்கும் பொறுப்பை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். (க-9)

### சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்

## 25 சிரங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்

(சுதுமலை)

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவன கீழுள்ள பண்டத்தரிப்பு மற்றும் சாந்தைப்பகுதிகளில் இவ்வருடம் முதல் மூன்றுமாத காலபபகுதிககுள் 25 சிரங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

சாந்தைக் கிராமத்தில் சுற்றாடல், சுகாதாரம், தனிநபர் சுகாதாரம் ஆகியவை சரியாகப் பேணப்படாததாலேயே இத் தொற்றுநோய் பரவுகிறது. இதன தாக்கத்திற்குட்பட்டவர்கள் சரியான முறையில் சிகிச்சை பெறாததாலேயே நோய் மேலும் பலருக்கு பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக இந்நோய் சிறுவர்களுக்கு அதிகம் பரவுவதாகத் தெரியவருகிறது. பெற்றோர்கள் இந்நோய தொடர்பாக தமது பிள்ளைகள் விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டுமென சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிரங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் நோய் முற்றாகக் குணமாகும் வரை சிறுவர்களுடன் நெருங்கிப பழகுவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். (க-7-252)


## பெயர் மாற்றம்

**அச்சுவேலி தெற்கு, அம்மன் கோவிலடியைச் சேர்ந்த நடராஜா ரூபவாஜினி ஆகிய நான் எனது பெயரை 25.04.2005 ஆம் திகதி இன்று திங்கட்கிழமை முதல் நடராஜா கௌரி எனப் பெயர் மாற்றம் செய்கின்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

நடராஜா கௌரி

(1307)


## விவாத அரங்கு -8

விடயம்

நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால் எமது கலாசாரம்:

- சீரழிந்துள்ளது.
- சீர்பெற்றுள்ளது.

**நடுவர்: சிரேஷ்ட சட்டத்தரணி திரு.சி.சிவநேசன்**

***உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.***

அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவரின் கல்வியை சீர்படுத்துகின்றனவா? சீரழிக்கின்றனவா?

## விவாத அரங்கு –7

**தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவரின் கல்வியை சீர்படுத்துகின்றனவா? சீரழிக்கின்றனவா? என்ற விவாத அரங்கிற்கு நடுநிலை நின்று தனது தீர்ப்பை வழங்குகின்றார் நா.சண்முகானந்தன்.**

தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவரின் கல்வியை சீர்படுத்துகின்றனவா? சீரழிக்கின்றனவா? என்ற விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தலைப்பு மீதான விவாதம் 14.03.2005 திங்கட்கிழமை தொடக்கம் 31.03.2005 வியாழக்கிழமை வரை ஒவ்வொரு திங்கள், வியாழக்கிழமைகளில் வலம்புரியில் இடம்பெற்றது.

சீர்படுத்துகின்றன என்ற அணியின் சார்பில் சுன்னாகம் ச.சிவரூபன், தெல்லிப்பழை செல்வி பா.சுபாஜினி, நீர்வை தியாகமணி, அச்சுவேலி தெற்கு சுகந்தினி முருகேசு, அல்வாய் வெ.துஷ்யந்தன், கொழும்புத்துறை ஜோ.ஜெஸ

### தீர்ப்பு

ரின் ஆகியோரும்,

சீரழிக்கின்றன என்ற அணியின் சார்பில் செ.சுகுணகுமார், வடலியடைப்பு சி.ரஜித், தனங்கிளப்பு வ.சின்னப்பா, அரியாலை திருமதி ர.இரகுநாதன், நீர்வேலி க.கணேசராசா, மானிப்பாய் நா.சிவநேசன் ஆகியோரும் தத்தம் தரப்பு வாதங்களை மிகத் தரமான முறையில் எடுத்துரைத்தனர்.

அரசியல் மற்றும் பல்வேறு செல்வாக்குகளைப் பயன்படுத்தி கற்பிக்கும் ஆற்றலற்ற ஆசிரியர்கள் பெரிய பாடசாலைகளில் இடத்தைப் பிடித்துக் கொள்கிறார்கள். அதனால் பல பாடசாலைகளில் திறமையான ஆசிரியர்கள் இல்லாத நிலைமை காணப்படுகிறது.

தனியார் கல்வி நிலையங்களில் ஒவ்வொரு பாடத்துக்கும் சிறப்பாகக் கற்பிக்கக் கூடிய திறமையான ஆசிரியர்கள் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் திறமையான ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு பாடத்தையும் விரும்பிய கல்வி நிலையத்தில் தெரிந்து கற்கும் வாய்ப்பு மாணவருக்கு உண்டு.

"மாணவர் பாடசாலையில் தாம் கற்ற பாடங்களை மீட்டல் செய்யும் ஒரு நிலையமாகத் தனியார் கல்வி நிறுவனங்கள் விளங்குகின்றன" என தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவரின் கல்வியைச் சீர்படுத்துகின்றன என்ற அணியினர் தங்கள் வாதத்தை முன்வைத்தனர்.

தனியார் கல்வி நிலையங்கள் மாணவர் கல்வியை சீரழிக்கின்றன என்ற அணியினர் தங்கள் கருத்தைக் கூறும்போது,

கல்வியை வியாபாரப் பொருளாக ஆக்கிய தனியார் கல்வி நிலையங்கள் தமது கல்வி நிலையத்தில் அதிகளவு மாணவர்களைச் சேர்த்து அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கில் செயற்படுகின்றன.

இங்கு கற்பிப்போர் மாணவர்களுடன் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிப்பதால் மாணவர்கள் எல்லை மீறிப் போய்விடுகிறார்கள். மாணவியரின் மேல் 'றொக்கற்' எறிதல், கரும்பலகை ,மரச்சட்டங்களில் பட்டப்பெயர் எழுதுதல், ஆபாச வார்த்தைகளால் வர்ணித்தல் என்பன இடம்பெறுகின்றன. ஆனால் அவை தட்டிக் கேட்கப்படுவதில்லை.

தனியார் கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் கூலிப் பணியாளராகவே கணிக்கப்படுகிறார்கள். மாணவர்கள் செலுத்தும் கூலி ஆசிரியருக்கு நேரடியாகக் கொடுக்கப்படுவதால் ஆசிரியரைக் கனம் பண்ண வேண்டிய தேவை மாணவருக்கு இல்லை. இதே ஆசிரியர்களே பாடசாலைகளிலும் கற்பிப்பதால் பாடசாலையிலும் அவர்கள் மதிக்கப்படுவதில்லை.

பாடசாலையை விட்டு வீடு வரும் மாணவர்கள் சாப்பிடவும் முடியாமல் தனியார்கல்வி நிறுவனங்களுக்குச் சென்று விடுகிறார்கள்.

இவ்வாறு இவர்கள் செல்வதால் பாடசாலையில் கொடுக்கப்படும் பரீட்சைச் செயற்பாடுகள், ஒப்படை, கணிப்பீடு என்பவற்றைச் செய்ய முடியாமல் ஆசிரியரின் கண்டிப்பையும் புள்ளி இழப்பையும் சந்திக்க நேருகிறது.

தனியார் கல்வி நிலையங்களில் அறிவு மாத்திரம் வளர்க்கப்படுகிறது. திறனும் மனப்பாங்கும் வளர்க்கப்படுவதில்லை.

தனியார் கல்வி நிறுவனங்களில் ஆர்வத்துடன் பணிபுரியும் ஆசிரியர்கள் பாடசாலைகளில் சற்றுத் தளர்வுடன் தான் கற்பிக்கிறார்கள். தனியார் கல்வி நிறுவனங்கள் இல்லையென்றால் ஆசிரியரின் பணியார்வம் பாடசாலைகளில் மேலோங்கி நிற்கும்.

எனவே பாடசாலையில் ஆசிரியர்களின் பணியின் பின்னடைவுக்கு தனியார் கல்வி நிறுவனங்கள் துணைபோகின்றன என்று சொன்னால் மிகையாகாது.

பல்கலைக்கழகம் செல்வதே கல்வியின் குறிக்கோள் என்ற கொள்கை வலுப்பெற்றுள்ள இக்காலத்தில் உயர்புள்ளி என்ற நோக்கில் மாத்திரமே தனியார் கல்வி நிலையங்கள் செயற்படுகின்றன. பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படாத பெரும்பாலான மாணவர்களின் நிலை கேள்விக்குறியே என்கின்றனர்.

கல்வியின் குறிக்கோள் பற்றிக் கல்வியியலாளர்களும் கல்விச் சிந்தனையாளர்களும் சொல்லியிருக்கக் கூடிய, சொல்லக் கூடிய கருத்துக்களுக்கு இன்று நாட்டிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள், ஏன் பாடசாலைகள் பாடத் திட்டங்கள், கற்பித்தல் முறைகள் என்பன இசைவாக இல்லையென்பது கவலைக் குரியதொரு விடயம்.

அந்த நிலையில் இந்த விவாதத்தின் தலைப்பு ஒரு சிறு வட்டத்துக்குள் நின்று ஆராயப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது.

இத்தகையதொரு சூழ்நிலையில் சில சீர்கேடுகளுக்கு ஒரு சில தனியார் கல்வி நிறுவனங்கள் காரணமாக அமைகின்றன என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கதே. தவறுகள் திருத்தப்பட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டால் சீர்கேடுகள் நடைபெறாமல் தடுக்க முடியும்.

தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களின் பாடசாலைச் செயற்பாடுகளில் சிறிய குறைபாடு காணப்படுகிறதென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ள அதேவேளையில் [illegible] கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களால் மதிக்கப்படுவதில்லை என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை.

பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களும், மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களிலும் தனிப்பட்ட முறையிலும் கற்று எமக்கும் பாடசாலைக்கும் பெயரெடுத்துத் தருவார்கள் என வாளாதிராமல் தங்களது திறனை வளர்த்து மாணவர்களை வளம்படுத்த வேண்டும். ஏனென்றால் கல்வி என்ற கட்டடம் பாடசாலையிலே தான் கட்டப்படுகிறது. அவற்றுக்கு பூச்சுப் பூசி வர்ணம் தீட்டி மெருகூட்டவே தனியார் கல்வி நிலையங்களால் முடியும்.

ஆக தனியார் கல்வி நிறுவனங்கள் பாடசாலைக் கற்பித்தலுடன் இணைந்து கைகோர்த்து தங்கள் கற்பித்தலை குறை நிரப்பலாக, வலுவூட்டலாக, மீட்டலாக நடாத்துவார்களேயானால் அக் கல்வியால் மாணவர் சீர்படுத்தப்படுவர் என்பது திண்ணம். □

**நா.சண்முகானந்தன்**

---

# தேசிய கடற்றொழிலாளர் சமாசக்குழு நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம்

இலங்கை தேசிய கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தைச் சேர்ந்த குலதுங்க தலைமையிலான குழுவினரும் பசுமை நிறுவன குழுவினரும் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி அரச செயலகத்திற்குச் சென்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆழிப்பேரலையாலும் போராலும், பாதிப்படைந்துள்ள கடல் தொழிலாளர்கள் பற்றிய ஆய்வொன்றை மேற்கொள்வதற்காகவே இவர்கள் சென்றனர். கிளிநொச்சி அரசாங்க அதிபர் மற்றும் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் மற்றும் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகளையும் சந்தித்து அங்குள்ள கடற்றொழிலாளர் பாதிப்புப் பற்றிக் கலந்துரையாடினர் இதன்போது

பிரதிநிதிகளிடம் பல கோரிக்கைகளை முன்வைத்தனர். அக்கோரிகைகள் வருமாறு, கடலில் அண்டிய பகுதிகளில் அதிஉயர் பாதுகாப்பு வலயம அகற்றப்பட வேண்டும் மட்டுபடுத்தப்பட்ட மீன்பிடி தளர்த்தப்படவேணடும். எமது கடல் எல்லைப் பரப்பில் வெளிநாட்டு மீன்பிடிகாரர்கள் அத்துமீறி மீன்பிடிப்பது நிறுத்த வேண்டும்.

யுத்தத்தாலும் ஆழிப்பேரலையாலும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு தொழில் உபகரணங்கள் வழங்க வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு சர்வதேச நிறுவனங்கள் நிவாரணம் வழங்கவேண்டும். பாதிபபடைந்த மக்களுக்கு கடற்கரையில் இருந்து அப்பால் பாதுகாப்பான இடங்களில் நிரநதர வீடுகள அமைதது தரவேண்டும். பாதிக்கபபட்ட படகுகளுக்குப் பதிலாக நவீன வசதிகளுடைய படகுகளைக் கட்டித்தர வேண்டும் கடல் உணவுகளை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடிய வசதிகள் கொண்ட வாகனங்கள் கொள்வனவு செய்து தரவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இச் சந்திப்பில் பச்சிலைப்பள்ளி, பூநகரி கரைச்சி வடக்கு மற்றும் ஏனைய கடல் தொழிலாளர் சமாச பிரதிநிதிகளும் சமுகமளித்திருந்தனர். (க)

---

# —பொதுக் கட்டமைப்பை— ஜே.வி.பி எதிர்ப்பது ஏன் ?

(கொழும்பு)

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளுக்காக அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் இணைந்து உருவாக்க உத்தேசித்துள்ள பொதுக் கட்டமைப்பு தொடர்பில் தனது நிலைப்பாட்டை கொழும்பிலுள்ள அனைத்துத் தூதரகங்களுக்கும் விளக்குவ்தற்கு அரசின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பி முடிவு செய்திருக்கிறது.

இதற்கு முன்னதாக தமது அரசியல் நிலைப்பாட்டை குறிப்பிட்ட சில தூதரகங்களுக்கு மட்டுமே விளக்கி வந்த ஜே.வி.பி இந்தக் கொள்கையை மாற்றி அனைத்து நாட்டுத் தூதரகங்களுக்கும் தனது கொள்கையை விளக்குவதென்று இவ்வார முற்பகுதியில் இடம்பெற்ற அரசியல் குழுக் கூட்டத்தில் முடிவு செய்திருக்கிறது.

உத்தேச பொதுக் கட்டமைப்புக் குறித்து தமது கட்சியின் நிலைப்பாட்டை முதன் முதலில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு விளக்குவதற்கு ஜே.வி.பி முடிவு செய்திருக்கிறது.

இது தொடர்பாக இந்தியத் தூதரகத்துடனான பேச்சு நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது.

இதேபோல் அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், சீனா மற்றும் இதர ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்களையும் விரைவில் ஜே.வி.பியினர் சந்திக்கவுள்ளனர்.

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரே இந்த நடவடிக்கைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர். (க)

---

# விடுமுறை தினங்களில் கடமையாற்றிய அரச ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் போது விடுமுறை தினங்களில் கடமையாற்றிய அரசாங்க ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்குவது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

இதுகுறித்து அமைச்சரவைக்கு பத்திரமொன்று சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் ஒருங்கிணைந்த சேவைப்பிரிவின் பணிப்பாளர் நாயகம் வி.ஜி.கருணாரட்ன தெரிவித்தார்.

விடுமுறை தினங்களில் கடமையாற்றும் பொது நிர்வாகத்தரத்தில் உள்ள அதிகாரிகளுக்கு ஒருநாள் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

எனினும் சுனாமி அனர்த்தம் ஏற்படட பின்னர் விடுமுறைக் காலங்களிலும அரச ஊழியர்கள் நிவாரண வபரங்களை அமைச்சுக்கு வழங்கியுள்ளார்கள்.

அவ்வாறான ஊழியர்களுக்கு கொடுப்பனவு ஒன்றை வழங்குவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். (க-9)

---

## கண்டியில் மே மாதம் நடைபெறவுள்ள

# அபிவிருத்தி மாநாட்டிற்கு வருமாறு உதவும் நாடுகளுக்கு அரசு அழைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் கண்டியில் நடைபெறவுள்ள இலங்கை அபிவிருத்தி மாநாடு என்ற பெயரிலான கூட்டத்திற்கு வருமாறு சகல உதவி வழங்கும் நாடுகளையும் இலங்கை அரசாங்கம் அழைத்துள்ளது.

இத் தகவலை நிதியமைச்சின் வெளிவிவகாரங்களுக்கான பணியக அதிகாரி தெரிவித்துள்ளார். இத்தகைய மாநாடு முன்னர் வாஷிங்டனிலும் நடைபெற்றிருந்தது.

இதன்படி உறுதியளிக்கப்பட்ட தொகையினை சமாதான செயற்பாடு தொடர்பில் இலங்கை எவ்வாறு பயன்படுத்தப்போகிறது என ஆராயவுள்ளார்கள்.

இம்மாநாட்டில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது இவர் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மீள் புனரமைப்புப் பணிகளை மேற்பார்வை செய்வதற்கு ஐ.நா.வின் விசேட தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.


இவ்வருடாந்த கூட்டமானது சுனாமி பற்றியதல்ல என குறிப்பிட்டுள்ள அவ் அதிகாரி, இலங்கையின் அபிவிருத்திக்கு வழங்கப்படும் சகலவிதமான உதவிகள் குறித்து அவர்கள் மீளாய்வு செய்வார்கள் என்றும் கூறினார். (க-6)

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

### (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 48



55. ஒவ்வொரு வாசகத்திற்குமுரிய இலக்கத்தை குழுக்களின் தவிசாளர் அல்லது செயலாளர் நாயகம் ஒன்றன்பின் ஒன்றாக வாசித்தல் வேண்டும்.

56. சட்டமூலத்திலடங்கிய பொருளுக்குப் பொருத்தமானதாகவும் அல்லது வேறுவகைகளில் நிலையியற் கட்டளைகளுக்கிசைந்ததாகவும் சட்டமூலத்தின் ஒரு வாசகத்தில் திருத்தங்கள் எதுவும் செய்யலாம் அல்லது வாசகங்களை நீக்கலாம் அல்லது புது வாசகங்களை சேர்க்கலாம்.

57.சட்டமூலத்தின் அடிப்படைக் கொள்கை குழு நிலையில் ஆராயப்படல் ஆகாது. விபரங்கள் மட்டுமே ஆராயப்படலாம்.

58. ஒரு சட்டமூலத்தின் முற்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவுக்கு முரணான எந்தவொரு திருத்தமும் பிற்பகுதியில் பிரேரிக்க முடியாது.

59. ஒரு சட்டமூலம் குழுநிலையில் மதிப்பிடப்பெற்று முடிந்ததும் அச்சட்டமூலம் தொடர்ந்து குழு நிலையிலுள்ள போது தவிசாளரின் அனுமதியுடன் எந்தவொரு உறுப்பினரும் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்த ஒரு வாசகதிற்கும் திருத்தம் பிரேரிக்கலாம்.

60. 1) ஒரு வாசகத்தின் திருத்தமொன்றில் அக்கிராசனம் பிரேரணையை முழுமையாகச் சமர்ப்பிக்காதவிடத்து அவ்வாசகம் பின்போடப்படலாம்.

2.சட்டமூலத்தின் எஞ்சிய வாசகங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னரும் புது வாசகங்கள் சமர்ப்பிக்கப்படு முன்னரும் பின்போடப்பட்ட வாசகங்கள் பரிசீலனை செய்யப்படல் வேண்டும்.

61. 1)சட்டமூலத்தின் அட்டவணைகளைப் பரிசீலிக்குமுன் அச்சட்டமூலத்துக்குப் புது வாசகங்கள் சமர்ப்பிக்கப்படலாம். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் புது வாசகங்கள் முதல் மதிப்பீடு பெற்றவையாகக் கருதப்படல் வேண்டும். அதையடுத்து முறையே "அந்த வாசகம் இரண்டாம் மதிப்பீடு பெறுக" என்றும் "அந்த வாசகம் (அல்லது திருத்தப்பட்டவாறான வாசகம்) சட்டமூலத்துடன் சேர்க்கப்படுவதாக" என்றும் பிரேரணைகள் பிரேரிக்கப்படல் வேண்டும்.

2) சட்டமூலத்திற்குரிய அட்டவணைகள் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதும் புது அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படலாம். அங்ஙனம் சமர்ப்பிக்கப்படும் அட்டவணைகள் புது வாசகம் எவ்வாறு பரிசீலிக்கப்படுமோ அவ்வாறு பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

3) ஒவ்வொரு வாசகமும அட்டவணையை பிரேரிக்கப்பட்ட புது வாசகமோ அல்லது அட்டவணையோ பரிசீலிக்கப்பட்டதும் சட்டமூலத்திற்குப் பாயிரம் ஒன்று இருப்பின் அப்பாயிரம் பரிசீலிக்கப்பட்டு "இது சட்டமூலத்தின் பாயிரமாக" என்ற பிரேரணை பிரேரிக்கப்படுதல் வேண்டும்.

4) சட்டமூலத்தின் சட்டப்பெயருக்கு ஏதாவது திருத்தம் தேவைப்படின் மேலே விபரிக்கப்பட்ட நடைமுறைகளில் ஈற்றில் அத்திருத்தம் பிரேரிக்கப்படல் வேண்டும்.

### *சட்டமூலங்கள் மீதான குழுக்களின் அறிக்கைகள்*

62. முழுப் பாராளுமன்றக் குழுவொன்று ஒரு சட்டமூலத்தைப் பரிசீலனை செய்து முடித்ததும் திருத்தப்பட்டவாறான அல்லது திருத்தங்களற்ற அச்சட்டமூலத்தை தவிசாளர் பாராளுமன்றத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

63. ஒரு சட்டமூலத்தைப் பரிசீலனைக்கென ஆற்றுப்படுத்தப்பட்ட ஒரு நிலையியற் குழுவோ அல்லது ஒரு தெரிகுழுவோ தனது விதப்புரைகளுடன் பாராளுமன்றத்திற்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வறிக்கையின் பிரதியொன்று ஒவ்வொரு உறுப்பினருக்கும் வழங்கப்படல் வேண்டும்.

64. ஒரு சட்டமூலத்தின் தெரிகுழுவின் அறிக்கையைத தவிசாளர் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வறிக்கை சபாபீடத்தில் இடப்படுவதாக எனக் கட்டளையிடலாம். அன்றேல் பாராளுமன்றம் வழிப்படுத்தும் வேறெவ் வகையிலும் கையாளப்படலாம். எந்தவோர் உறுப்பினரும் பிரேரிக்கும் பிரேரணை ஒன்றின் அடிப்படையில் ஒரு சட்டமூலத்தை முழு பாராளுமன்றக் குழுவொன்றுக்கு ஆற்றுப்படுத்தலாம் அல்லது தெரிகுழுவின் அறிக்கையை அச்சட்டமூலத்துக்குப் பொறுப்பாயுள்ள உறுப்பினர் நியமிக்கும் ஒருநாளில் பரிசீலனை செய்வதற்கென ஒதுக்கலாம்.

65. ஒரு சட்டமூலத்தின் நிலையியற் குழுவொன்றின் அறிக்கையைத் தவிசாளர் சமர்ப்பித்தல் வேண்டும். அச்சட்டமூலத்துக்குப் பொறுப்பாயுள்ள உறுப்பினர் நியமிக்கும் ஒருநாளில் அவ்வறிக்கை பரிசீலனை செய்வதற்கென ஒதுக்கப்படல் வேண்டும். ஒரு நிலையியற் குழுவின் அல்லது தெரிகுழுவின் அறிக்கை பரிசீலனை செய்யப்படுமிடத்து குழுவால் அச்சட்டமூலத்தில் திருத்தங்கள் ஏதுவும் செய்யப்பட்டிருப்பின் பாராளுமன்றம் அக்குழு செய்திருக்கும் திருத்தங்களை மட்டுமே பரிசீலிக்கும். ஆனால் அத்திருத்தங்களை மேலும் திருத்தலாம். குழுவால் செய்யப்பட்டு பாராளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திருத்தங்களின் விளைவாக பின்தொடர்கின்ற திருத்தங்களைத் தவிர அறிக்கையைப் பரிசீவலனை செய்கையில் பாராளுமன்றத்தால் புதிய திருத்தங்கள் எதனையும் செய்ய முடியாது. ஆனால் குழுவால் செய்யப்பட்ட குறிப்பிட்ட சில திருத்தங்களைப் பற்றிய குறிப்புடன் சட்டமூலம் அதே குழுவிற்கு மறு பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்படலாம்.

### *மூன்றாம் மதிப்பீடு*

66. முழுப் பாராளுமன்றக் குழுவால் நிறைவேற்றப்பட்ட அல்லது ஒரு தெரிகுழுவால் திருத்தமின்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்ட ஒரு சட்டமூலம் ஒரு பிரேரணையின் அடிப்படையில் உடனே மூன்றாம் மதிப்பீடு பெற்று நிறைவேற்றப்படலாம். அல்லது மூன்றாம் மதிப்பீட்டைப் பின்போட வேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் பின் போடலாம்.

67.1) ஒரு நிலையியற் குழுவால் திருத்தமின்றிப் பாராளுமன்றத்திற்கு ஒரு சட்டமூலம் அறிக்கை யிடப் படுமிடத்து அவ்வறிக்கையின் பரிசீலனைக்கென நியமிக்கப்படும் நாளிலேயே மூன்றாம் மதிப்பீடு பெற்று நிறை வேற்றபடலாம். அல்லது மூன்றாம் மதிப்பீட்டைப் பின்போட வேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் பின்போடப் படலாம்.

2) ஒரு சட்டமூலத்தில் ஒரு நிலையியற் குழுவோ ஒரு தெரிகுழுவோ திருத்தங்கள் செய்திருந்தால் குழு செய்த திருத்தங்களைப் பாராளுமன்றம் பரிசீலனை செய்து முடித்தவுடன் மூன்றாம் மதிப்பீடு பெற்று நிறைவேற்றப்படலாம். அல்லது மூன்றாம் மதிப்பீட்டைப் பின் போட வேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் அவ்வாறு பின்போடப்படலாம்.

68. (ஒரு சட்டமூலத்தின் மூன்றாம் மதிப்பீட்டின் பொழுது. முன்னறிவித்தலில் பின்கொணரப்படும் பிரேரணையின் அடிப்படையில் வார்த்தைகளில அல்லது வாசக உருவில் திருத்தங்கள் செய்யலாம். சபாநாயகரின் சான்றுரை சட்டமூலத்தில் குறிக்கப்படுமுன் எந்நேரத்திலும். சட்டமூலத்திலிருக்கத்தக்க இலக் கணப் பிழை அல்லது தட்டெழுத்துப் பிழை எதனையும் திருத்துவதற்குச் சபாநாயகருக்குத் தத்து வமுண்டு)

### *சபாநாயகரது சான்றுரை*

69. சட்டமூலமொன்று பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டதும் அதிகூடிய விரைவில் அரசியலமைப்பின் 79ஆம் உறுப்புரையில் விதிக்கப்பட்டுள்ள சான்றுரையை சபாநாயகர் அச்சட்டமூலத்தில் சிங்களத்திலும் தமிழிலும் புறக்குறிப்பிடுதல் வேண்டும்.

### *ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கென ஒதுக்கப்பட்ட நாட்கள்*

70. ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை பரிசீலிப்பதற்கென டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பாக (இதற்கு முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டாலன்றி) இருபத்தாறு நாட்களுக்கு மேற்படாமல் ஒதுக்கப்படல் வேண்டும்.

(தொடரும்)

# பேராதனையில் பரவும் புதியநோய்

# கண்டறிய அரசு துரித நடவடிக்கை

(கண்டி)

செங்கடகல மயோக்கா டைட்டீஸ் நோயால் பாதிக்கப்பட்டோர். என கருதப்படும் 30 நோயாளர்களின் இரத்தம், சிறுநீர் என்பவற்றின் மாதிரிகள் சோதனைக்காக அமெரிக்காவிலுள்ள இரசாயன பகுப்பாய்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்க துரித நடவடிக்கைகள் மேற்கொண் டுள்ளதாக சுகாதார அமைச்சு வட்டாரம் தெரிவிக்கின்றது.

பேராதனை போதனா வைத்திய சாலையில் மயோக்கா டைட்டீஸ் நோய் அறிகுறிகளுடன் பலர் கடந்த சில வாரங்களாக சிகிச்சைபெற்று வருகினறனர் என்றாலும் இவர்களின் நோய் உறுதி செய்யப்படவில்லை.

இவ்வாறான நோய் அறிகுறிகளுடன் அனுமதிக்கப்பட்ட பலகலைக் கழக மாணவி ஒருவர் உட்பட மூவர் அண்மையில் திடீர் மரணமடைந்துள்ளனா.

இதேவேளை, வைத்திய பிரிவைச் சேர்ந்த வைத்தியர்கள் உட்பட பலர் சிகிச்சைக்காக இங்கு அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே இவ்வாறான நோயாளர்கள் 30 பேரின் இரத்தம், சிறுநீர் என்பன பரிசோதனைக்காக அமெரிக்காவில் பிரதான பரிசோதனை கூட நிலையத்திற்கு அனுப்பிவைக்க சுகாதாரஅமைச்சு தீர்மானித்துள்ளது.

இப் பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னரே இவர்களின் நோய் உறுதிப்படுத்தப்படும் அதன்பின்னர் உரிய சிகிச்சைகள் மேற்கொள்ளப் படுமென வைத்தியசாலை வட்டாரம் தெரிவிக்கின்றது. (க-5)

# உலக சுகாதார நிறுவனத்தின்

# உளவள பயிற்சிக் கருத்தரங்கு

(சுதுமலை)

இலங்கையில் சுனாமித் தாக்கத்திற்கு இலக்காகிய எட்டு மாவட்டங்களிலும் குடும்ப அங்கத்தவர்களை இழந்தவர்களுக்கு விசேட உளவள ஆலோசனைகளையும், குடும்ப நல முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளையும் வழங்குவதற்காக சுகாதாரத்துறைசார் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான இருநாள் பயிற்சிக் கருத்தரங்கு அண்மையில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

உல்க சுகாதார நிறுவனம் ஏறபாடுசெய்த இப்பயிற்சிக் கருத்தரங்கு இலங்கையில் இரண்டாவது முறையாக யாழ்.மாவட்டத்தில் நடைபெற்றது.

இதில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பணிபுரியும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் யாழ். மாவட்டத்திலுள்ள ஏழு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் பணிபுரியும் ஐம்பதிற்கும் மேற்பட்ட மேற்பார்வை மற்றும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு பறிற்சிகளைப் பெற்றனர்.

இக்கருத்தரங்கில் உலக சுகாதார நிறுவனத்தின் அமெரிக்கப் பிரதிநிதி, யாழ்.போதனா வைத்தியசாலை உளவளத்துறை வைத்திய நிபுணர் டாக்டர் தயா சோமசுந்தரம் உளவளத்துறை இரத்தவங்கி வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சிவசங்கர், உளவளத்துறை சமூக வேலைத் திட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.ரவீந்திரன் ஆகியோர் விரிவுரைகளை வழங்கினர்.

இக்கருத்தரங்கை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆகேதீஸ்வரன் ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (க-7,252)

# தேசிய இலக்கிய கலைப் பெருவிழா

(கரவெட்டி)

கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு நாடு முழுவதும் தேசிய இலக்கிய கலைப் பெருவிழாவை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

இப் போட்டிகள் பிரதேச, மாவட்ட மாகாண தேசிய மட்டங்களில் நடாத்தப்படவுள்ளன.

இப போட்டிகளில் வெற்றிபெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் பரிசில்களும், சான்றிதழ்களும் அந்தந்த விழாக்களில் வழங்கப்படும்.

பிரதேச விழாக்கள் மே மாதம் 31ஆம் திகதிக்கு முன்னரும், மாவட்ட விழாக்கள் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னரும் மாகாண விழாக்கள் ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னரும் நடைபெறும்.

இவ்வாண்டிற்கான தேசிய கலை இலக்கியப் பெருவிழா செப்ரம்பர் மாத முதல் வாரத்தில் நடைபெறும். இந்த வகையில் கரவெட்டி பிரதேச மட்டப் போட்டிகள் மே மாதம 4ஆம் 5ஆம் திகதிகளில் பிற்பகல் 3மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

நாட்டுப்புறப்பாடல், நடனப் தவிர்ந்த ஏனைய போட்டிகளில் பங்கு பற்றுபவர்கள் தமது ஆக்கங்களை மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் ஒப்படைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை கரவெட்டி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (க-7,101)

# பெண்கள் வலைப்பந்தாட்டத்தில்

# பமிலியன் கழகஅணி சம்பியன்

(சுண்டுக்குளி)

யாழ்.உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழக அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டித் தொடரில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டங்கள், கடநத 20ஆம் திகதி புதன்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் யாழ்.மாவட்ட வலைபந்தாட்ட பயிற்றுநர் திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கத்தின் நெறிப்படுத்தலில் நடைபெற்றன.

முதலில் இடம்பெற்ற அரை இறுதியாட்டத்தில் குருநகர் விளையாட்டுக் கழ்க அணி அதனை எதிர்த்தாடிய தொடர்மாடி விளையாட்டுக் கழக அணியை இலகுவாக 14:02 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.

இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் பமிலியன் விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்தாடிய சென் அன்ரனீஸ் அணியை 18:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இறுதி ஆட்டத்தில் பமிலியன் விளையாட்டுக்கழக அணி, அதனை எதிர்த்து ஆடிய குருநகர் விளையாட்டுக்கழக அணியை 30:09என்ற புள்ளிகள் அடிப்படையில் வெகு சுலபமாகத் தோற்கடித்து சம்பியன் பட்டத்தை தனதாக்கிக்கொண்டது. (க-7,110)

## வெட்கம் மனிதருக்கே!

'நாயே, குரங்கே' என்று
நம்பேர் சொல்லி மனிதர்கள்
ஏசுகையில் வெட்கம்
மனிதருக்கே - ஏனென்றால்
வேற்று விலங்குகள் நாம்
விரவும் பகை மறந்து
ஒன்றின்மேல் ஒன்று உறங்கும் போது
ஒரே இனமான மனிதர்கள்
ஒருவரை ஒருவர் பகைக்கிறார்களே!

வ. சின்னப்பா,
தனங்கிளப்பு.

## ஒற்றுமை

ஐந்தறிவு படைத்த விலங்குகள
ஐக்கியமாகக் கூடி நின்று
ஒன்றையொன்று கட்டித் தழுவி
ஆழந்த உறக்கத்தில் இருக்கும்
அழகுதான் என்னே!
ஆறறிவு படைத்த மனிதனோ
அகங்கார சிந்தையுடன்
ஒற்றுமை இழந்து
ஒருவரோடு ஒருவர்
சண்டை போடுவதேனோ?!

செ.பாக்கியநாதன்,
சங்கானை.

## ஆறறிவு படைத்தவனா?

ஐந்தறிவு படைத்த விலங்குகள் கூட
இனபேதமின்றி ஒற்றுமையாய் வாழ்ந்துவர
இனவாதம பிடித்தலைகின்ற மனிதா!
நீ! ஆறறிவு படைத்தவன் தானா?


க. சுகிரதன்,
சங்கானை.

## உடன்கட்டை (நன்றி)யா?

அன்னை தந்தையற்று
அனர்த்தங்களால்
அநாதையாக்கப்பட்ட என்னை
அன்னையாயிருந்து
வேற்றுணர்வின்றி
அணைத்துப் பாலூட்டி
மகிழவைத்தாயே!
எனன மோசம் வந்து~ இப்போ
எனை நிரந்தர அநாதையாக்கி
விட்டுச் சென்றாயோ?
உன்னைவிட்டால் இனி
வேறு கதியில்லை
உடன்கட்டை நானுமேறி
விட்டேன் ~ நன்றியைக்
காட்டிட!

பொ.புனிதன்,
வரியப்புலம்.

# மௌனத்தின் தேடல்கள் - 56



## எடுத்துக்காட்டு!

திக்குத் தெரியா காட்டினிலே
தாயின் பிடியைத் தளரவிட்டு
நாயின் பிடியில் சிக்கியதே
இந்தச் சின்னக் குரங்கு குட்டி!
நாயின் எஜமான் வீட்டினிலே
கழுத்தில் மணிகள் கட்டியே
செல்லமாக வளருதே
இந்தச் சின்னக் குரங்குக் குட்டி
தாயின் அணைப்பு இது என்றே
நாயின் முதுகின் மீதேறி
இன்பமாகத் தூங்கிடுதே
இந்தச் சின்ன குரங்குக் குட்டி
ஒற்றுமை இல்லா மனிதருக்கு
நாயும் குரங்கும் ஒற்றுமையை
எடுத்துக்காட்டுதோ?

ம.கீதா.

## நல்லதொரு பாடம்!

நன்றிக்கு இலக்கணமாய்
நானலத்தார் உனைப் போற்றும்
நல்லதொரு காவல் வீரனே!
நாய்களே என இழித்துப் பேசுவோர்க்கு
நலலதொரு பாடம் -
நற்குரங்காருககு நீ கொடுத்த மெத்தை.


கி.குகநாதன்,
தம்பசிட்டி.

## ஏன் முடியவில்லை?

ஐந்தறிவு படைத்த ஜீவன்களே
ஒற்றுமையுடன் வாழ்கின்றபோது
ஆறறிவுடைய மானிடனே!
உன்னாலேன் ஒற்றுமையாய
வாழ முடியவில்லை...?

நிகா, உடுவில்.

# மௌனத்தின் தேடல்கள் - 58



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வுகளை **மிகச் சிறிய** கவிதைகளாக்கித் **தபால் அட்டையில்** வலம்புரி - சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள. ***கிடைக்கவேண்டிய இறுதித் திகதி*** - 01.05.2005 அனுபபவேண்டிய முகவரி:-


மௌனத்தின் தேடல்கள்- 58
**வலம்புரி - சங்குநாதம்**
15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்

## அன்னை தரும் ஊண்



முந்நாளில் என் அன்னை
முழுநிலாக் காட்டி என்னை
ஓர் வாயாகாரம் ஊட்டிடுவாள்
'ஆ'வெனச் சொல்ல வைத்தே
அழுது தனை தீத்தி வாயார
பால் தருவாள் உறங்கிடவே



பின்நாளில் பள்ளி செல்லுங்கால்
முன் நின்றே உணவூட்டி
பின் பையிலோர் 'பாசல்' கட்டி
'இடைவேளைக்கிது' என்பாள
அக்காலம் வரை தான்
அன்னை தரும் ஊணது
என்றறிந்திலேன் அப்போது நான்

இந்நாளில் வேலைக்குச்
செல்லும் நான் வயசான என் அன்னைக்கும்
ஆகாரமாக்கி வைத்து - என்
அவருக்கும் பைதனிலே போட்டுவைத்து
நேசறி செல்லுமென் பிஞ்சிற்கும் ஊட்டி
நேரம் தப்பாது போகவேண்டும் வேலைக்கு

அன்னை அழுதூட்டாளோ...
இப்போது என்வாய்க்கு
என்றேங்கிறதே மனம்...!

ஜெ. சுபா

## துளிர் விடும்... பனைமரங்கள்!

எங்கள் தமிழீழத்தில்
அவதாரம் செய்த
பனைமரங்கள் எல்லாம்
உண்மையல்
பாக்கியம் செய்தவை
காவலரணாக
சுமைபுரிந்த
...களில் கயவர்கள்
சாவதைப் பார்த்து
களிப்படையும்...
விடுதலைக்காக
அந்த கயவர்களின்
குண்டுகளால்
அங்கங்களை இழந்து
அங்கவீனராகவும்
சொநதங்களை இழந்து
தனிமரமாகவும் தவித்த
நாட்களும் உண்டு...
எங்கள் மறவர்கள்
மாவீரரானபோது ~ தங்கள்
தலைகளை தாழத்தி
அஞ்சலி புரிந்தன...
அப்போது
அந்தப் பனை மரங்கள்
நெகிழ்நது மீண்டும துளிர்விட்டன..


பா.தீபகசெல்வன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## என்றென்றும் வாழ்வாய்

காதல் என்னும்
உறவை
கார் உலகம்
கலைத்திட
நினைத்திட்டாலும்
காலத்தின்
சரித்திரங்களும்
கல்லறையை
முத்தமிட்டவர்
காவியங்களும்
காலமெல்லாம்
நிலைத்திருக்கும்.

தெ. திலீவ்,
சித்தன்கேணி.

## கல்லறையா? தாஜ்மஹாலா?



விழியே....!
உனக்கென்ன
விதைத்துவிட்டுப் போய்விட்டாய்
வெடித்து முளைத்தது
என் இருதயமல்லவா....

பேய் காற்றே!
"அனுமதி தென்றலுக்கு மட்டும்"
விளம்பரப்பலகை பார்த்தாய்தானே
இருந்தும் ஏனடி நுழைந்தாய்
இதய(ே)சாலைக்குள் புயலாய்?
ஒரு புன்னகையைத் தானே
தூக்கியெறிந்தாய்
அலையலையாய் இன்னும்
சலனப்படுவது என் மனசு
எப்படி முடிந்தது உன்னால்
என் உயிரைக் கூட
கர்ச்சிப்பாய் கசக்கிப்பார்க்க...?

சகியே...!
உமிழ்நீராய்ச் சுரக்கும்
நினைவுகளை விழுங்கிக்கொள்வதால்
பசி கூட எடுக்குதில்லை
அம்மாவின் புலம்பல் எல்லாம் அன்னம் என்
அடிவயிற்றை நிரப்பவில்லையென்பதுதான்
அவளுக்கெங்கே பு(தெ)ரியப் போகிறது
எனக்குள் இருக்கும் நீ
அடிமனதில் நடத்தும் அரங்கேற்றமெல்லாம்...
முன்னைய காலங்கள் போல்
முடியவில்லையடி என்னால்
விடிகாலை வரை விழிமூட...

சகியே...!
இப்போதெல்லாம் புரியவேயில்லை
ஒரு கல்லறையா? தாஜ்மஹாலா?
எனக்கு உரித்தாகுமென்று!

நோயல்.

## மசுக்குட்டி

எச்சில்களால் கச்சிதமாய்
நூல் தொடுத்து
மெல்ல இறங்கிவரும்
பொல்லாதவனாம்
தொட்டவரை மட்டும்
விட்டுவைக்காது
மனித தோல்களில்
நரைத்த மயிர்களால்
வீககம் தருவானாம்
செம்பகத்தின் முத்தம்
அழிவைத் தருமென்று
தப்பிக்கப் பதுங்குவான்
துளிர்மைக்காய் ஏங்குவான்
காரணம் - நாளை
வண்ணாத்திப் பூச்சியாய்
வானில் பறப்பதற்கே!

*ஜோ.ஜெஸ்ரின்,*
*கொழும்புத்துறை.*

# ஐ.நா.சபையில் அதிக பிரதிநிதித்துவம் வேண்டும் எயிட்ஸ், தீவிரவாதம் ஒழிக்க ஒன்றுபடுவோம்

## ஆசிய - ஆபிரிக்க மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங்

(ஜகார்த்தா)

ஆசிய-ஆபிரிக்க நாடுகள் மாநாட்டில் பிரதமர் மன்மோகன்சிங் நேற்றுமுன்தினம் உரையாற்றினார். அப்போது அவர் ஐக்கிய நாடுகள் சபையில் அதிக பிரதிநிதித்துவம் கேட்போம். எயிட்ஸ், தீவிரவாதத்தை ஒழிக்க ஒன்றுசேருவோம் என்று கூறினார்.

ஆசிய - ஆபிரிகக நாடுகளின் முதல் மாநாடு 1955ஆம் ஆண்டு இந்தோனேஷியாவில் நடந்தது. அந்த மாநாட்டில் இந்தியாவின் முதல் பிரதமர் நேரு, பாகிஸ்தானின் முகமது அலிஜின்னா, சீனத் தலைவா சூனெலாய் உட்பட 24 நாட்டு தலைவர்கள் கலந்துகொண்டனர்.

அதன்பிறகு ஆசிய - ஆபிரிக்க நாட்டுத தலைவர்களின் 2ஆவது மாநாடு 50 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தோனேஷியா தலைநகர் ஜகார்த்தர்வில் கடந்த வெளிக்கிழமை தொடங்கியது. அதில் 106 நாடுகளின் தலைவர்கள் பங்குபெற்றனர். நேற்று 2ஆவது நாள் மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் பேசினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், நம்மிடையே உள்ள நல்ல தொழில்நுட்பம் சிறந்த பயிற்சிகளின் மூலம் பயனடைய பரஸ்பரம் உதவி, ஒத்துழைப்பு, ஒற்றுமையை நாம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

உலகில் தற்போது உள்ள தகவல் தொழில்நுட்பத்தைப் பார்க்கும்போது நம் நாடுகளுக்கு இடையே உள்ள தூரம் என்பது அர்த்தம் அற்றதாகிவிட்டது. 50 ஆண்டுகளுக்கு முன்பு நமது நாட்டுத் தலைவர்கள் இங்கே கூடிய பிறகு ஒருங்கிணைந்த சிறிய உலகில் இப்போது நாம சந்திக்கிறோம். உலகமயமாக்கல் உருவான பிறகு வாய்ப்புக்களுக்காக சுதந்திரமான போட்டி தகவல் தொடர்பு உடனடியாகக் கிடைப்பது எளிதாகிவட்டது.

விஞ்ஞானம் - தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் வறுமையை ஒழிக்க பல வாய்ப்புக்களை தந்திருக்கிறது. வளரும் நாடுகளில் விவசாய விளைபொருட்கள் ஏற்றுமதிககான தடைகளை நீக்கவும், லட்சக்கணக்கான விவசாயிகளின் வாழ்க்கையைப் பாதுகாககவும வளரும் நாடுகள் விவசாயத்துக்கு அளித்துவரும் மானியத்தைப் படிப்படியாக ஒழிக்க வேண்டும்.



நம் நாடுகள் இடையே விசா கட்டுப்பாடுகளால் மக்கள் மற்றும் பணிகளின் தாராள நடமாட்டம் தடைப்பட்டு அதன் மூலம் பொருளாதார பலத்தின் முழுப் பயனை அடையமுடியாமல் இருக்கிறோம். எனவே இந்த விசா கட்டுப்பாடுகளை நீக்கவேண்டும்.

வளர்ச்சியின் பயனகள் அனைவருக்கும் சமமாகக் கிடைக்கும் வகையிலான சூழ்நிலையை தேசிய அளவில் ஒவ்வொரு நாடுகளும் உருவாக்கவேண்டும். நமது இயற்கை சக்தி ஆதாரங்களை மற்றவர்கள் உறிஞ்சிவிடாதபடி பாதுகாப்பை ஏற்படுத்தவேண்டும். ஆசிய - ஆபிரிக்க நாடுகளின் மக்கள் தொகை உலக மக்கள் தொகையில் பாதிக்கு மேல் இருக்கிறது. அப்படி இருந்தும் ஐ.நா.சபை உட்பட சர்வதேச அமைப்புகளில் நமக்கு போதிய பிரதிநிதித்துவம் இல்லை. நமக்குரிய பிரதிநிதித்துவத்தைச சர்வதேச அமைப்புகளில் பெறவேண்டும்.

உலகமயமாக்கல் என்று வரும் போது நோய்கள் பரவுதல், பாதுகாப்பற்ற தன்மை, இயற்கை ஆதாரங்கள் பறிபோகுதல் ஆகியவை நாம் சந்திக்கும் சவால்கள் ஆகும். பறவைக்காய்ச்சல், எச்.ஐ.வி, எயிஸ்ட், தீவிரவாதம் போன்றவற்றுக்கு உலகளாவிய தீர்வுகாண வேண்டும். அதற்கு நாம் ஒன்றுசேர்ந்து போராடவேண்டும் என்றார்.

பாகிஸ்தான் அதிபர் முஷாரப் உட்பட பல்வேறு நாட்டுத் தலைவர்கள் மாநாட்டில் பேசினார்கள். நேற்றுடன் இம் மாநாடு முடிவடைந்துள்ளமை தெரிந்ததே.

(க)

# கொலம்பியாவில் 11 இளைஞர்கள் பலி

## சடலங்கள் ஆற்றில்...

(லண்டன்)

கொலம்பியா நாட்டில் 11இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டு ஆற்றில் வீசப்பட்டனர்.

அமெரிக்க எல்லைப்பகுதியில் அமைந்துள்ள நகரம் ஒன்றில் இச்சம்பவம் நடைபெற்றது.

கால்பந்து விளையாடச் சென்ற 12 முதல் 25 வயதுக்குட்பட்ட இவ்விளைஞர்கள் தலையில் சுடப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பிறகு அவ்வுடல்கள் ஆற்றில் வீசப்பட்டுள்ளன.

எந்தக் காரணத்திற்காக அவர்கள் கொல்லப்பட்டனர் எனத் தெரியவில்லை. கொலை நடந்த பகுதி போதைப்பொருள் கடத்தல் கும்பலின் ஆதிக்கம் அதிகம் உள்ள பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

WORLD NEWS உலக தரிசனம்

# நேபாளத்தில் பள்ளி மீது தாக்குதல்

நேபாளத்தில் அரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டம் நடத்திவரும் மாவோயிஸ்ட் தீவரவாதிகள் அதிக கட்டணம் வசூலிக்கும் பள்ளிக்கூடங்கள் மீது தொடர்ந்து குறிவைத்துத் தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர்.

சிடாராவன் மாவட்டத்தில் உள்ள ஒரு தனியார் பள்ளி மீது தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் குண்டுகளை வீசினார்கள். இதில் அப்பள்ளிக்கூடத்தின் 5 மாடிக் கட்டடம் இடிந்து விழுந்தது.

அச்சமயத்தில் வகுப்புகள் நடந்து கொண்டிருந்ததால் 6 மாணவர்கள் படுகாயமடைந்தனா். பல இலட்சம் மதிப்புள்ள பொருட்களும் கடும்சேதம் அடைந்தன.

(க)

# பேசும் படங்கள் அறிமுகம்

(டோக்கியோ)

ஜப்பானில் அடுத்தவாரம் பேசும் படங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

ஜப்பானில் அடுத்தவாரம் பேசும் படங்களை ஒரு நிறுவனம் விற்பனைக்கு அறிமுகப்படுத்தவுள்ளது. பேனா போன்ற கருவியை இந்தப் படங்கள் முன்பு கொண்டுபோனால் 12நிமிடங்கள் அந்தப் படத்தில் உள்ள நபர்கள் அவர்களின் குரலில் நம்மோடு பேசுகிற தன்மை உடையவை இவை.

தொலைதூரத்தில் வசிக்கும் பேரன், பேத்திகளுடன் வீட்டில் இருந்தபடியே பெரியவர்கள் உரையாட விரும்பினால் இந்தப் படங்கள் ஒரு வரப்பிரசாதமாகும்.

இந்த நிறுவனத்துடன் தொடர்புகொண்டால் படம் எடுக்க விரும்பும் நபர் களை புகைப்படம் எடுத்து பேசும் பட வசதியுடன் செய்து கொடுக்கப்படும். இதற்கு ஆகும் செலவு ஏறத்தாழ 7 ஆயிரம் ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது.

(ற)

# 30 ஆயிரம் தேனீக்களை தேடும் பணியில் பொலிஸார்

மத்திய இங்கிலாந்தில் கலைநது போன 30 ஆயிரம் தேனீக்களை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

மத்திய இங்கிலாந்தில் வொர் ஜெஸ்டாஷயர் பகுதியில் தேனீக்கள் நிறைநத 2 கூடுகளை ஒருவர் பாதுகாத்து பராமரித்து வந்தார்.

திடீரென்று ஒருநாள் ஒரு கூட்டில் இருந்த 30ஆயிரம் தேனீக்கள் கலைந்து ஒட்டுமொத்தமாக எங்கோ பறந்துவிட்டன.

மற்றொரு கூட்டுத் தேனீக்கள் அப்படியே உள்ளன. இந்த ஒரு கூட்டில் மட்டும் தேனீக்கள் திடீரென்று கலையக் காரணம் என்ன என்று தெரியவில்லை.

மேலும் கலைந்த தேனீக்கள் எந்தத் திசையில் சென்றன என்பதும் தெரியவில்லை.

கலைந்த தேனீக்கள பற்றி பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களும் அவற்றைக் கண்டு பிடித்தால் பொலிஸில் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளனர்.

பொலிஸார் தங்களை வலைவீசித் தேடுவது தேனீக்களுக்குத் தெரியுமா என்பது தெரியவில்லை.

(க)

# சுங்கரராமன் கொலை வழக்கு ஆவணங்கள் செங்கல்பட்டு நீதிமன்றுக்கு அனுப்பிவைப்பு

(செங்கல்பட்டு)

சங்கரராமன் கொலை வழக்கு ஆவணங்கள் காஞ்சிபுரம் கோர்ட்டிலிருந்து செங்கல்பட்டு கோர்ட்டுக்கு அனுப்பி வைககப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம் சங்கரமட மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு கடந்த 31ஆம் திகதி குற்றப்பத்திரிகை நகல் வழங்கப்பட்டது.

கடந்த 17ஆம் திகதி காஞ்சிபுரம் நீதிபதி உத்தமராஜ் வழக்கை செங்கல்பட்டு செஷன்ஸ் கோர்ட்டிற்கு மாற்றம் செய்வதாகவும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் 27ஆம் திகதி செங்கல்பட்டு செஷன்ஸ் கோர்ட்டில் ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டிருந்தார்.

அதனை அடுத்து வழக்கு தொடர்பான ஆவணங்களை செங்கல்பட்டு செஷன்ஸ் கோர்ட்டுக்கு மாற்றும் பணி துவங்கியது. அனைத்து ஆவணங்களும் கடந்த வியாழக்கிழமை முறைப்படி செங்கல்பட்டு செஷன்ஸ் கோர்ட்டுக்கு அனுப்பபட்டன.

(ற)

# பெற்ற மகள்களை மகனுடன் சேர்ந்து கற்பழித்த தந்தை

(ஐதராபாத்)

பெற்ற மகளை மகனுடன் சேர்ந்து தந்தை கற்பழித்த கொடுமை ஆந்திராவில் நடந்துள்ளது. 'இதுதொடர்பாக தந்தையும், மகனும் கைது செய்யப்பட்டனர்.

ஆந்திர மாநிலம், ஐதராபாத் அருகே ஹபிஸ்பாபா நகர் உள்ளது. இங்கு வசிப்பவர் சயீத் அஜாஜ். மனைவி பெயர் சோபியா பேகம். இவர்களுடைய மூத்த மகன் இலியாஸ் பெரோஸ். மூத்த மகள மதியா பானோ, 14 வயதில் மைனர் மகள ஒருவரும் உண்டு.

அஜாஜும் இலியாசும் பழ வியாபாரம் செய்துவருகின்றனர். சோபியா பேகம் வீட்டு வேலை செய்துவருகிறார்.

வயிறு வலிப்பதாக சில தினங்களுக்கு முன் அஜாஜின் மகள் கூறினார். சோபியா பேகம் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். சிறுமியை பரிசோதித்த டாக்டர்கள் அந்தச் சிறுமி கர்ப்பமாக இருக்கிறார் என சோபியா பேகத்திடம் கூறினார்கள். அதிர்ச்சியடைந்த சோபியா பேகம் தன மகளிடம் விசாரித்தபோது,

சிறுமி அப்பாவும், அண்ணனும் என்னைக் கற்பழித்தனர். இதை வெளியில் சொன்னால் பயங்கர பின்விளைவு ஏற்படும் என்று மிரட்டினர் என்று சிறுமி கூறினாள்.

கணவன் மீதும், மகன் மீதும் சோபியா பேகத்துக்கு வெறி ஏற்பட்ட போதும் முதலில் மகளுக்கு கருக் கலைப்பு செய்து விடும்படி டாக்டர்களிடம் கேட்டுக்கொண்டார்.

ஆனால், டாக்டர்கள் பொலிசுக்கு தகவல் கொடுத்தனர். லலா ராப் எனற பெண எஸ்.ஐ.விசாரணை நடத்தி தந்தையையும் மகனையும் கைது செய்தார். அதன் பின் சிறுமிக்கு டாக்டர்கள் கருக் கலைப்பு செய்தனர்.

சிறுமியை கற்பழிதததது உண்மைதானா என்று அறிய தந்தைக்கும் மகனுக்கும் டிஎன்ஏ சோதனை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

பெற்ற மகளையே கற்பழித்த அஜாஜை விவாகரத்து செய்துவிட சோபியா பேகம் முடிவு செய்துள்ளார்.

இதேவேளை, தன் மூத்த மகள் மதியா பானோவையும் அஜாஜும், அவருடைய மகனும் இதேபோல் சிரழித்தது தெரியவந்துள்ளது.

கடந்தாண்டு, அரபு நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு பானோவை திருமணம் செய்து வைத்தனர். ஆனால், அந்த அரபு கணவன் பானோவை அடித்து விரட்டி விட்டான்.

(க)

# தாயால் கைவிடப்பட்ட இரு புலிக்குட்டிகளுக்கு தன் பாலை ஊட்டும் பெண்

(லண்டன்)

மியான்மரில் மிருகக்கட்சிச்சாலையில் தாயால் கைவிடப்பட்ட புலிக்குட்டிகளுக்குப் பெண் ஊழியர் ஒருவர் தன் பாலை ஊட்டுகிறார்.

மியான்மர் நாட்டில் யங்கூன மிருககாட்சிச்சாலை உள்ளது. இங்கு கடந்த மார்ச் மாதம் 3 புலிக்குட்டிகளை தாய்ப் புலி ஈன்றது. அவற்றில் ஒன்றை தாயே கொன்றுவிட்டது. மற்ற 2 குட்டிகளையும் அது கைவிட்டுவிட்டது.

மிருகக்காட்சிச்சாலை அதிகாரிகள் அநத 2 குட்டிகளையும் மீட்டு தனியாக பராமரித்தனர். அவற்றிற்கு புட்டிப்பால் ஊட்டினார்கள்.

ஆனால் புட்டிப்பாலை அந்த குட்டிகள் சாப்பிட மறுத்தன. இதனால் ஒரு பெண்ணை அவரது தாய்ப்பாலை ஊட்டி சோதனை செய்தனர்.

இதில் பெண் ஊட்டிய பாலை குட்டிகள் விரும்பிச் சாப்பிட்டன. இப்போது தினமும் 3 தடவை வீட்டில் இருந்து மிருகக் காட்சிக்கு செல்கிறார் அந்தப் பெண்.

தினமும் 3 தடவை குட்டிகளுக்கு தனது பாலை ஊட்டுகிறார்.

இந்த மாத இறுதிவரையோ அல்லது புலிக்குட்டிகளுக்கு பல் முளைக்கும் வரையோ அவர் பால் ஊட்டுவார் எனக் கூறப்படுகிறது.

(க)

காரைநகர் கிழவன்காடு திருவருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி கோயில்

மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

மஹா கும்பாபிஷேகம
சித்திரை 14ஆம்நாள்
புதன்கிழமை 27.04.2005
காலை 6.00 முதல 7.29வரை



எண்ணைக் காப்பு
சித்திரை 13ஆம் நாள்
26.04.2005
காலை 6.00 முதல் 2.00 வரை

முருகப் பெருமான் மெய்யடியார்களே!

இந்து சமுத்திரத்தின் முத்தெனப் போற்றப்படும் இலங்காபுரியின் வடபாலமைந்த சிவபூமி எனத் திருமூலரால் போற்றப்பட்ட யாழ்ப்பாணத்தின் மேல்பாலமைந்துள்ள காரைநகரின் கிழவன்காடு எனும் புண்ணியஷேத்திரத்தில் ஞானசக்தியாய் எழுந்தருளி அரசாட்சிபுரியும் முருகப் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் சுபமங்களகரமான பார்த்திப வருஷம் **சித்திரைத் திங்கள் 14ஆம் நாள் புதன்கிழமை (27~04~2005)** அனுச நட்சத்திரமும், திருதியை திதியும் மேடலக்கினமும் அமிர்தசித்தயோகமும் கூடிய **காலை 6.00 மணிமுதல் 3.29 மணி** வரையுள்ள சுபமுகூர்த்த வேளையல் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. அன்றும் அதற்கு முன்னரும் நடைபெறும் புனித பூர்வாங்கக் கிரியைகளிலும் கலந்து திருத்தொண்டுகள் புரிந்து எம்பெருமான இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வீர்களாக. மாலை 3.00 மணிக்கு சாயரட்சை பூசையைத் தொடர்ந்து த'ருக்கல்யாணம் நடைபெற்று விஷேட சாத்துப்படியுடன் வீதியுலாவரும் அருட காட்சியும் இடம்பெறும்.

**கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 10 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 11ஆம் நாள் மண்டலாபிஷேகம் இறுதிநாளாக 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.**

**மங்கள இசை : க.வீராச்சாமி குழுவினர்**

**முக்கிய குறிப்பு: கும்பாபிஷேகத்திற்குத் தேவையான பால், தயிர், இளநீர், மாலை, சமித்து ஆகியவற்றை தேவஸ்தானத்தில் சேர்க்கவும்.**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

காரைநகர்
கிழவன்காடு கந்தசுவாமி
தேவஸ்தானம்.

இங்ஙனம்
சிவஸ்ரீ.ச.ப.ஆறுமுகக்குருக்கள்
(பரம்பரை ஆதீனமும் திருப்பணிச்சபையினரும்)


# இரண்டாயிரத்து ஐநூறு பேர் தாதிச் சேவையில் இணைக்கப்படுவர்

(கொழும்பு)

தாதிச் சேவையின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் துறை சார்ந்த பயிற்சிநெறிகளை நடத்துவதற்காக கொழும்பை மையமாகக கொண்டு ஆரம்ப தாதியர் பயிற்சிக் கல்லூரி நிறுவப்படவுள்ளது.

இதனை அமைப்பதற்காக நான்கு கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால ஸ்ரீபால டி சில்வா தெரிவித்தார்.

சேவைக்குப் பிந்திய பயிற்சிகளைப் பூர்த்திசெய்த 108 தாதிமாருக்கு சான்றிதழ்களையும் நியமனஙகளையும் வழங்கும் வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வு சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

சுமார் இரண்டாயிரத்து ஐநூறு பேரை தாதிச் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக அமைசசர் மேலும் அங்கு கூறினார். (ரு-5)

# ஓய்வூதிய செயற்பாடுகளை விரிவாக்க ஓய்வூதியத் திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

பிரதேச செயலகங்கள் தோறும ஓய்வூதியச் செயற்பாடுகளை விரிவாக்கவும் துரிதப்படுத்தவுமென ஓய்வூதியத் திணைக்களம் ஓய்வூதிய உத்தியோகத்தர்களை நியமிக்கவுள்ளதாக ஓய்வூதிய பணிப்பாளர் கே.ஏ.திலகரட்ன அறிவித்துள்ளார்.

இதன்படி நாட்டிலுள்ள 250 பிரதேச செயலகங்களிலும் ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதுதொடர்பான விண்ணப்பங்களைத் தகுதியுள்ள அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரிகளிடமிருந்து ஓய்வூதியத் திணைக்களம் கோரியுள்ளது.

இப்பதவிக்கான விண்ணப்பங்களை மே மாதம் 3ஆம் திகதி வரை அனுப்பிவைக்கமுடியும எனத தெரிவிககப்பட்டுள்ளது. (ரு-9)

# கதிரைகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பராமரிப்பிலுள்ள நான்கு நலன்புரி நிலையங்கள் உள்ளடங்கலான கற்கோவளம், தும்பளை கிழக்குப் பகுதிகளிலுள்ள 403 குடும்பங்களுககுக் கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன.

கற்கோவளம், தும்பளை கிராமம் பொதுமண்டபத்தில் கடந்த புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு இந்நிகழ்வு நடைபெற்றது.

இதில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உப தலைவர் பேராசிரியா ப.சிவநாதன், நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் தே.தேவானந்த், மேற்படி நிறுவன உத்தியோகத்தர்கள், அப்பகுதி கிராமசேவையாளா, போராளி அன்பழகன மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், அங்கததவர்கள் ஆகியோர் கலந்துகொணடனா.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 4 கதிரைகள் வீதம் விநியோகிக்கப்பட்டமை குறிபபிடத்தக்கது. (ரு)

# பொதுமக்கள் அனுப்பும் கடிதங்களுக்கு ஒருவாரத்துக்குள் பதில் அனுப்ப வேண்டும்

## பொது நிர்வாக அமைச்சர் அரச திணைக்களங்களுக்கு பணிப்புரை

(கொழும்பு)

பொதுமக்கள், அரச திணைக்களங்களுக்கு அனுப்பும் கடிதங்களுக்கு ஒரு வாரத்துக்குள் பதில் கடிதங்கள் அனுபபவேண்டும் என்று பொது நிர்வாக அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அமைச்சர் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற அரச ஊழியர் செயற்பாடுகளை ஆராயும் கூட்டத்திலேயே அமைச்சர் இப்பணிப்புரையை விடுத்தார்.

இதுதொடர்பாக பொது நிர்வாக அமைச்சின் ஊடக ஆலோசகர் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தொிவிக்கையில்,

அரச திணைக் களங்களுக்கு பொதுமக்கள் பல்வேறு தேவைகளின் நிமித்தம் கடிதங்களை அனுப்புகின்றனர்.

ஆனால் கடிதங்கள் அனுப்பப்பட்டு பல நாட்கள் கடந்தும் அச் கடிதங்களுக்கான பதில்கள அனுப்பப்படுவதில்லை.

இதனால் அரச ஊழியர்கள் வினைத்திறன் அற்றவர்கள் என்ற பொதுவான விமர்சனம் பொதுமக்கள் மத்தியில் நிலவுகின்றது.

இந்நிலைமை மாற்றப்படவேணடும் எனபதே அமைச்சரின் நோக்கமாகும்.

எனவே, திணைக்களஙகளுக்கு வருகின்ற கடிதங்கள் குறித்து ஊழியர்கள் அக்கறை கொள்ளவேண்டும். பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கும் அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் அரச ஊழியர்கள் முயற்சிக்கவேண்டும்.

குறைந்தபட்சம் பொதுமக்கள் அரச திணைக்களங்களுக்கு அனுப்பும் கடிதங்களுக்கு ஒரு வாரத்துக்குள் பதில் கடிதங்களை அனுப்பவேண்டும் என்று அமைச்சர் அமரசிறி தொடங்கொட பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, இதுதொடர்பான விபரங்கள் அடங்கிய சுற்று நிருபங்கள் விரைவில் பொது நிர்வாக அமைச்சினால் சகல அரச திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9,5)

# சட்டவிரோதமான முறையில் தமிழர்கள் இலங்கை வருவதைத் தவிர்க்க வேண்டும்!

## தமிழகத்திலிருந்து தாயகம் திரும்ப விரும்புவோருக்கு புனர்வாழ்வு அமைச்சின் ஆலோசகர் அறிவுரை

(கொழும்பு)

தமிழ்நாட்டில் அகதிகளாகத் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் சட்டவிரோதமான முறையில் இலங்கை வருவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

யு.என்.எச்.சீ.ஆர் வழிகாட்டலுடன் சட்டரீதியாக வருபவர்களுக்குப் பாதுகாப்பும், சலுகைகளும் வழங்கப்படும் என நிவாரணம் புனர்வாழ்வு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி எ.குணசிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டிலிருந்து இலங்கை வருபவர்களுக்கு மீளக்குடியேறுவதற்காக 25 ஆயிரம் ரூபா பணமும், 2 இலட்சத்து 50ஆயிரம் ரூபா பெறுமதியான வீடும் கட்டிக்கொடுக்கப்படும்.

அத்துடன் சட்டரீதியாக இலங்கை வருபவர்களுக்குப் பயணச்சீட்டு மற்றும் ஒரு தொகைப் பணமும் வழங்கப்படும்.

தமிழகத்திலிருந்து இலங்கை வருபவர்கள் சட்டவிரோதமான முறையில் வள்ளங்களில் வரும்போது பாலியல் துன்புறுத்தல்கள், கொள்ளை போன்ற பல இன்னல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இதிலிருந்து மீள்வதற்கு அகதிகள் அனைவரும் சட்டரீதியான முறையில் வருவதற்கு முன்வரவேண்டும்.

சுமார் 55 ஆயிரம் இலங்கைத தமிழர்கள் தற்போது தமிழ்நாட்டில் உள்ளனர். இலங்கையின் தறபோதைய சமாதான சூழ்நிலை தொடாவதனால் அவசர அவசரமாக அவர்கள் தாயகம திரும்ப முன்வருகின்றனர்.

அத்துடன் பெருந்தொகையான பொதிகளைத் தம்முடன் எடுத்து வர விரும்புகின்றனர். மேலும் இலங்கைக்கு திரும்புவதற்கான ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதில் இழுபறிநிலை மற்றும் தாமதம் காரணமாகவே சட்ட விரோதமான முறையில் தாயகம் திரும்புகின்றனர்.

தமிழ்நாட்டில் தமது பயண ஆவணங்களை உடனடியாகப் பெற்றுககொள்வதற்காக இலங்கையிலிருந்து குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் குழுவொன்றை அனுப்புவதற்கும் எமது அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒரு பயணிக்கு 30 கிலோ எடைக்கு கூடுதலான எடையை தம்மோடு எடுத்துவருவதற்கும் யு.என்.எச்.சீ.ஆர் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் ஊடாக பேச்சு நடத்தியுள்ளது.

இந்நிலையில், சட்டவிரோதமான முறையில் வள்ளங்களில் குழந்தைகள், பெண்களுடன் தாயகம் திரும்புவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், வீணான ஆபத்துக்களில் சிக்கவேண்டாம் எனவும் கலாநிதி எ.குணசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தாயகம் திரும்பும் இலங்கையர்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த மாவட்ட அரச அதிபர்கள் நடவடிக்கை எடுத்துவருகின்றனா என்றும் கலாநிதி எ.குணசிங்க தெரிவித்தார். (க-9)

# மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நடமாடும் சேவை கிளிநொச்சியில்!

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நடமாடும் சேவை எதிர்வரும் 29,30ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடாத்தப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ள இந் நடமாடும் சேவையில், மோட்டார் போக்குவரத்து ஆணையாளரும் திணைக்கள பதவிநிலை உத்தியோகத்தர்களும் சமுகமளித்து சேவையாற்றவுள்ளனர்.

இந்நிலையில், இதுவரை சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பித்து சாரதி அனுமதிப் பத்திரம் கிடைக்காதவர்களும், வாகனப்பதிவு மற்றும் வாகன உடமை மாற்றம் ஆகியவற்றுக்கு விண்ணப்பித்து வாகனப்பதிவு சான்றிதழ் கிடைக்காதவர்களும் தங்களின் எழுத்து மூலமான முறைப்பாட்டை உரிய ஆவணங்களுடன் இணைத்து அவர்களிடம நேரில் சமர்ப்பித்து தங்களின் பிரச்சினைக்கான தீர்வைப் பெறறுக்கொள்ளுமாறு மோட்டாா போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் கேட்டுள்ளார். (ரு)


**விற்பனைக்கு**

சகலவிதமான சொனி, பனசொனிக் ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற்கள், சிற்றிசன், சீகோ கைமணிக்கூடுகளையும், சுவா மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக் கொள்ள

**நியூ சிற்றி ரேடர்ஸ்**

135, கஸ்தூரியார் றோட்,
குளத்துக்கு முன்பாக,
யாழ்ப்பாணம்.
T.P: 222 3226


# தந்தை செல்வநாயகத்தின் 28ஆம் ஆண்டு நினைவு நாள்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வநாயகத்தின் 28ஆவது ஆண்டு நினைவு நாளான நாளை செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணிக்கு தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில் சர்வமத பிரார்த்தனை நிகழ்வு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு யாழ்.வீரசிங்க மண்டபத்தில் தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுத் தலைவர் மேதகு ஆயர் அருட் கலாநிதி சு.செபநேசனின் தலைமையில் விசேட நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் சி.பத்மநாதன 'இலங்கைத்தமிழரும் சுயாட்சி உரிமையும்' எனும் பொருளில் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். (க-51,21)

# வாகனம் கைப்பற்று

(கொழும்பு)

ஓமந்தை சோதனைச் சாவடியூடாக வன்னிக்கு எடுத்துச்செல்ல முற்பட்ட இருபது இலட்சம் ரூபா பெறுமதியான டபிள்க் கப் வாகனம் ஒன்று பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வாகனத்துக்கு எந்தவிதமான பதிவுபபத்திரங்களும் இல்லாமையினால் இந்த வாகனம் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டு, வவுனியா பொலிஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

வாகனத்தின் சாரதி வவுனியா மாவட்ட நிதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். (ரு-8)

# இளைய தலைமுறையை நாசமாக்கும் சினிமாக்களும் தொலைக் காட்சிகளும்

இடுப்பைக் குலுக்காத டான்ஸ இல்லை; பாலியல் கேவலங்களுக்குக் குறைவே இல்லை; உறவுகளைக் கொச்சைப்படுத்துவதற்கும் குறைவில்லை; சினிமாவில் மட்டுமல்ல, ரீ.விக்களிலும் அதன தொடர்கள் உட்பட நிகழ்ச்சிகளிலும் இவையே தொடர்கின்றன. பள்ளிக் குழந்தைகளைத் தவறான பாதையில் இட்டுச்செல்லும் அவ்வளவு விஷயங்களும் ரீ.விக்களில் பரவி வருகின்றன. இதனால் என்னவென்றே தெரியாமல் குழந்தைகள் பாலியல் அத்துமீறலுக்கு ஆளாகின்றனர்.

இந்தப் பிஞ்சுகளுக்கு எது நல்லது?, எது கெட்டது? என்பதைச் சொல்லாமல் பொத்திப் பொத்தி வளர்க்காதீர்கள். பள்ளிப் பருவத்திலே பெற்றோர் வைக்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோரின் கடமை. அப்படியிலலாமல் பொத்திப் பொத்தி வளர்ப்பதாலோ, அளவுக்கதிகமாக சுதந்திரம் கொடுப்பதாலோ பயனில்லை.

சமீபத்தில் எடுக்கப்பட்ட பல மதிப்பீடுகளில், பள்ளி இறுதியைத் தொடும், பள்ளியைத் தாண்டிய வளர் இளம்பெணகளின் பாலியல் நாட்டத்தைப் பற்றி விபரீத விஷயங்கள் வெளிவந்துள்ளன.

இவர்களின் சதவீதம் 20க்கும் குறைவுதான் என்றாலும், எதிர்காலத்தில் மேலைத்தேய பாணி அதிகரித்து நம் கலாசார, பண்பாட்டு புனிதத்தன்மை வெகுவாகச் சரிய வாய்ப்புண்டு.

சமீபத்தில் பெங்களூரில் மகளிர் செய்தி சேவை நிறுவன எது சரி என்பதே ஒவ்வொரு தட்டு மக்களுக்கும் தனித்தன்மையாக உள்ளது. ஒரு தரப்பு மக்களுக்கு சரியாக உள்ள விஷயங்கள் நடுத்தர, கீழ் நடுத்தர மக்களுக்குத் தவறாக உள்ளது. பாலியல் விஷயங்களில் மேலைத்தேய பாணி, உடை, பழக்கவழக்கங்கள் எல்லாம் பணக்கார வர்க்கத்தை மட்டுமல்ல, நடுத்தர வர்க்கப் பெண்களையும் பீடித்துள்ளது.

இதன் விளைவுதான் எயிட்ஸ் என்ற பாலியல் கொடூரனின் பிடியில் ஆண்களும் பெண்களும் சிக்கித் தவிக்கின்றனர். கடந்த காலங்களை விட, இப்போது பல வகையிலும் பாலியல் விஷயங்களில் நம் பாரம்பரிய புனிதத்தன்மை வெகுவாக மறைந்து வருகிறது. அதனால், எதையும் வெளிப்படையாகச் சொல்லி, விழிப்புணர்வை எற்படுத்தினால் தான் பள்ளிப் பருவத்திலேயே குழநதைகளை நல்வழிக்குக் கொண்டுவர முடியும்.

## மூடி மறைக்காமல் குழந்தைகளுக்கும் புரியவையுங்கள்

எதுவும் சொல்லாமல் பொத்திப் பொத்தி வளர்ப்பதால் எது தவறு என்று தெரியாமலே தவறுக்கு ஆளாகி வருந்துகின்றனர்.

சிலகாலம் முன்பு இன்டர்நெட் சேட்டிங், இப்போது மொபைல் போன், எஸ்.எம்.எஸ். மூலம் பல பள்ளிக் குழந்தைகள் கூடத் தவறான பாதைக்குச் சென்று, கடைசியில் வருந்துகின்றனர்.

எல்லாவற்றுக்கும் பெற்றோர்தான் காரணம். எந்த வசதியை, எந்தச் சலுகையை அளித்தாலும் கண்காணிப்பு முக்கியம். கல்லூரியில் காலடிவைக்கும் வளர் இளம்பெண், பருவத்தை அடையும் வரை அந்த குழந்தையைப் பொத்தி வளர்ப்பதால் எந்தப் பலனும் இல்லை.

பாலியல் விஷயங்களில் இது தவறு, இது சரி என்பதை எல்லாம் அவர்களுக்குத் தெரிய இயக்குனர் அங்கனா பரேக், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட உதவித் தள தூதர் சுரேகா சபர்வால், இந்தியன் இன்ஸ்டிடியூட் ஒப் மனேஜ்மென்ட் சாரில் கீதா சென், மத்திய அரசு பணியாளர் மற்றும் பயிற்சித்துறை அதிகாரி சலீம்ஹக் ஆகியோர் பங்கேற்று நடத்திய கருத்தரங்கில், எயிட்ஸ், பாலியல் ஆகிய விஷயங்கள் பற்றிய மதிப்பீட்டு முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அதில், சில விஷயங்கள் மனதைப் பெரிதும் நெருடுகின்றன.

பத்தாண்டுகளுக்கு முந்தைய வாழ்க்கைமுறைக்கும், இப்போதைய 'லைப் ஸ்டைலுக்கும்' அடிப்படை வேறுபாடுகள் உள்ளன. அன்று இது தவறு, இது சரி என்பதற்கு சீரான வழி' முறைகள் இருந்தன. இது தவறானது என்ற விஷயங்கள் வெகு குறைவு. இன்று எது தவறு,

பெங்களூர் ஐ.ஐ.எம். கருத்தரங்கில் பல்வேறு அமைப்புகள், சர்வதேச அளவில் எடுத்துத்தநத மதிப்பீட்டு முடிவுகளை தொகுத்து அளித்தனர். அதில் எயிட்ஸ் பாலியல் தொந்தரவுகள், கீழைத்தேய நாடுகளிலும பரவி வருவதை அறியமுடிந்தது.

இதோ சில முக்கிய புள்ளி விபரங்கள்:

*கடந்த 2003ஆம் ஆண்டை எச்.ஐ.வி /எயிட்ஸ் பாதிப்பில் உள்ள நான்கு கோடி பேரில் பாதிப்பேர் பெண்கள் என்று தெரியவந்துள்ளது.

*இந்த எண்ணிக்கையில ஆசியா மற்றும் பசிபிக் மண்டலத்தைச் சேர்ந்தவர்கள் 60 சதவீதம் பேர்.



*அடுத்த சில ஆண்டுகளில் இந்தியாவின் மக்கள் தொகையைக் கணக்கிட்டால், 50லட்சம் பேர் எச்.ஐ.வீ பாதிப்புக்குள்ளாகும் ஆபத்து உள்ளது.

*பல சுற்றுசூழல் கேடுகள் தவறுகளால் ஆசியா நாடுகளில் எச்.ஐ.வி அபாயம் 5மடங்கு அதிகமாகவே உள்ளது.

*தமிழ்நாட்டில் பாலியல் நோயாளிகளில் 82சதவீதம் பேர், ஒருவருக்கு மேற்பட்டவர்களுடன் உடலுறவு வைத்துள்ளனர்.

*இந்தியாவில் ஆண் விபச்சாரம ஓசைபடாமல் அதிகரித்து வருகின்றது. அதுபோல, ஆண்களிடம் ஆண் உடலுறவு கொளளுவதும் கணிசமாக அதிகரிக்கிறது. இப்படிப்பட்டவர்களில் 90சதவீதம் பேர் திருமணமும் செய்துகொண்டுள்ளனர்.

*இந்தியாவில் பள்ளி செல்லும் 13-15 வயது மாணவிகள் பாலியல் தொந்தரவுகளுக்கு ஆளாக்கப்படும் சூழ்நிலைகள் அதிகரித்துள்ளது.

* எச்.ஐ.வி பாதித்த தாய் கர்ப்பம், தாய்ப்பால் தருவது ஆகியவற்றால் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் எச்.ஐ.வி பாதிப்பேற்பட்டுள்ளது.

*உலக அளவில் இப்படி பாதிக்கப்பட்ட குழந்தைகள் எண்ணிக்கை 10 லடசம்.

* * *

## குளிர்பானங்கள் புது சக்தி அளிக்குமா?

தொலைக்காட்சிகளில் இன்று கணக்கற்ற குளிர்பான விளம்பரங்கள் வருகின்றன. ஒவ்வொரு நிறுவனமும் தங்கள் குறிர்பானத்தை குடித்தால் புதுத்தெம்பு, புது சக்தி கிடைக்கும் என்ற கருத்தை அடிப்படையாக வைத்து விளம்பரங்கள் கொடுக்கிறார்கள்.

ஆனால் உண்மையில் இந்தக் குளிர்பானங்களால் ஒரு தெம்பும் கிடைக்காது. அதுபோல சக்தியும் கிடைக்காது. அதற்குப் பதில் தீமைகள்தான் தாராளமாகக் கிடைக்கும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

இன்று பிரபலமாக பேசப்படும் குளிர்பானங்கள் பற்களை கண் இமை போல பாதுகாக்கும் எனாமலை கொஞ்சம் கொஞ்சமாக அழித்துவிடுவதால் நாளடைவில் பற்சிதைவு நோய்கள் உண்டாகும். இதுபோக பற்களுக்கு வலிமை தரும் கல்சியம் சத்தை கொஞ்சம் கொஞ்சமாகக் கரையச் செய்கின்றன. கல்சியம் போதிய அளவுக்கு இருந்தால்தான் பற்கள் உறுதியாக நிற்கும். பல் ஈறு தொடர்பான நோய்கள் வராமல் காப்பாற்றும். இந்நிலையில் குளிர்பானங்கள் அந்த சத்துக்கே வேட்டு வைத்துவிடுவதால் பற்களின் கதி அம்போதான்.

குளிர்பானங்கள் நீண்டநாள் கெடாமல் இருப்பதற்காக பயன்படுத்தப்படும் அமிலங்கள்தான் இதற்கெல்லாம் காரணம். வியாபார நோக்கில் செயல்படும் நிறுவனங்கள் மக்களின் உடல்நலனைப் பற்றக் கவலைப்படும் என்றும் பற்களைப் பாதிக்காத வகையில் அமிலங்களைச் சேர்க்கும் என்று நினைப்பது தவறுதானே. நம்முடைய பற்கள் ஆரோக்கியமாக இருக்கவேண்டுமானால் குளிர்பானங்களைத் தொடாமல் இருப்பது நல்லது.

குறிப்பாக குழந்தைகள் இத்தகைய பானங்களுக்கு அடிமையாகாமல் பார்த்துக்கொள்வது மிக முக்கியமானது.

# ஆரோக்கியம் தரும் முட்டை

இயற்கையில் கிடைக்கும் மிகச் சிறந்த உணவுகளில் ஒன்று முட்டை. இதில் எளிதில் ஜீரணமாகும் புரோட்டீன்களும், சத்துப் பொருட்களும் ஏராளமான தாதுப் பொருட்களும் காணப்படுகின்றன. அதேசமயம் சிறிதளவுக்கு வேண்டாத விஷயங்களும் உள்ளன எனபதை மறுப்பதற்கில்லை. அதற்காக முட்டையை முழுமையாக வெறுத்து ஒதுக்குவது சரியாக இருக்கமுடியாது.

முட்டை என்றதும் அதில் அடங்கியிருக்கும் கொழுப்பு மற்றும் கொலஸ்ட்ரோல்தான் உடனடியாக நினைவுக்கு வரும். இந்த இரணடுமே இருதய இரத்த நாளங்களுக்கு கெடுதல் செய்பவை என்பதால் பலர் முட்டையைத் தொடுவதற்குப் பயப்படுகிறார்கள். இந்தப் பயம் தெளியவேண்டுமானால் முதலில் இந்த இரண்டையும் பற்றித் தெளிவாக அறியவேண்டும்.

கொலஸ்ட்ரோல் என்பது ஏதோ நாம் சாப்பிடுகின்ற பொருட்கள் மூலம்தான் உடம்பில் சேருவதாக கருதுகிறார்கள். அதுபோல அது



உடலுக்கு ஒவ்வாத பொருள் என்ற எண்ணமும் மேலோங்கி உள்ளது. இந்த இரண்டுமே தவறு.

ஏனெனில், நமது உடம்பில் உள்ள ஒவ்வொரு செல்லும் கொலஸ்ட்ரோல் இல்லாவிட்டால் உடம்பு வளர்ச்சி என்பதே இருக்காது. உடம்பில காணப்படும் 80 சதவீத கொலஸ்ட்ரோலை உடம்பே உற்பத்தி செயதுகொள்கிறது. நீங்கள் கொஞ்சமாகச் சாப்பிட்டாலும் சரி, அதிகமாகச் சாப்பிட்டாலும் சரி, இது இயல்பாக நடந்துகொண்டே இருக்கும்.

செல்களில் காணபபடும் கொலஸ்ட்ரோல களால் பெரும்பாலும் நன்மை நடக்கிறது. இரத்தத்தில் சேமிக்கபபடும் வெறும் 7 சதவீத கொலஸ்ட்ரோல் தான் பிரச்சினையை ஏற்படுத்தும் அதுவும் ஒக்சிஷனேற்றம் அடைந்தால் ஒழிய (அப்படி நடந்தால் இரத்த நாளங்களின் சுவர்கள் கடினமாகி இதயத்துக்கு ஆபத்து ஏற்படும்) பிரச்சினை எதுவும் இல்லை. இது தெரிந்துதானோ என்னவோ, இயற்கையே முட்டையில் ஒரு இயற்கையான நோய எதிர்ப்பு பொருளை வைத்துளளது. அதன் பெயர் **lecithin** என்பதாகும். இது முட்டையில் உள்ள கொலஸ்ட்ரோல் சிக்கலை ஏற்படுததாமல் தடுத்கிறது.

பொதுவாக முட்டையில் எதைச் சாப்பிட்டால் ஆபத்து என்று கருதப்படுகிறதோ, அதே மஞ்சள் கருவில்தான் இந்தப் பொருள் உளளதென்பது இந்த இடத்தில் குறிப்பிடத்தக்கது.

இரத்தத்தில் காணப்படும் கொலஸ்ட்ரோலுக்கும் உணவில் காணப்படும் கொலஸ்ட்ரோலுக்கும் எந்தச சம்பந்தமும் இல்லை. ஆனால் ஒரு சிலர் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருககலாம் அவர்களை கொலஸ்டரோல் தேவையாளிகள் (**cholesterol responders**) என்று சொல்லலாம்.

வழக்கமாக உணவு மூலம் கொலஸ்ட்ரோல் அதிகளவில் கிடைககிறது என்றால், தான் உற்பத்தி செய்யும் கொலஸ்ட்ரோலை உடம்பு தானாகவே குறைத்துக் கொள்ளும். ஆனால் இத்தகைய நபர்களுக்கு உணவு மூலமாக கிடைககும் கொலஸ்ட்ரோல் அதிகரிக்கும்போது உளளுக்குள் உற்பத்தி செய்யும் கொலஸ்ட்ரோலை குறைக்கும் வித்தையை உடம்பு செய்யாது. கொலஸ்ட்ரோல் விஷயத்தில் இவர்கள் பிரச்சினைககுரிய நபர்கள என்பதால் சற்று உன்னிப்பாக கண்காணிக்கவேண்டியுள்ளது.

முட்டையின் மஞ்சள் கருவில் **arachadonic acid** என்ற அதி முக்கியமான அமிலம் காணப்படுகிறது. இது மனித உடம்புக்கு மிகவும் தேவையான ஒரு கொழுப்பமிலம் ஆகும். உடம்பின் வளர்சிதை மாற்றத்துக்கு தேவையான இந்த அமிலம் மனிதர்களில் 20 சதவீதம் பேருக்கு பற்றாக்குறையாக இருப்பதாக புள்ளிவிபரம் சொல்கிறது. ஒருபுறம் நன்மை செய்யும் இந்த அமிலம் இன்னொரு புறம் ஆபத்தையும் உண்டாக்குகிறது.

அதாவது பல்வேறு நோய் நொடிகளை உண்டாக்கும் பொருட்களில் இது மூலக்கூறாக அமைந்துள்ளது. இத்தகைய பிரச்சினை உள்ள நபர்களை மிகவும ஆபத்தான நிலையில் உள்ளவர்களாக கருதலாம் இந்தச் சிக்கலை சமாளிக்க **arachadonic acid** மற்றும் ஓமேகா -3 அமிலங்கள் இடையே சம விகித நிலையைக் கடைப்பிடித்தால போதும் (ஓமேகா-3 அமிலம் மீன் மற்றும் மீன் எண்ணெயில் அதிக மாகக் காணப்படுகிறது). இந்த இரண்டையும் ஒழுங்காக பார்த்துககொண்டால், நீங்கள் ஒரு நாளைக்கு ஒரு முட்டை என்ன 10 முட்டை சாப்பிட்டாலும் ஒரு பிரச்சினையும் வராது.

எனவே, முட்டை என்பது நிச்சயம ஆரோக்கியமான உணவுதான.

## இன்று ஒரு தகவல்

# கடிதம்

ஒரு ஆன்மீகப் பெரியவர் இருந்தார். அவரிடம் எத்தனையோ நல்லபழக்கங்கள். அவரிடம் நான் பார்த்து ஆச்சரியப்பட்ட விஷயம் என்ன தெரியுமா? வருகின்ற கடிதங்களுக்கு உடன்பதில் போடுவது இவ்வளவுக்கும் அவர் தினமும் ஒரு ஊரில் இருப்பார். பக்திப் பிரசங்கம் செய்து கொண்டிருப்பார். கடிதம் போடுபவர்கள் அவருக்குத் தெரிந்தவராக இருந்தாலும் சரி. தெரியாதவர்களாக இருந்தாலும் சரி உடனே ஒரு தபால் அட்டையில் இரண்டுவரி எழுதிப் போடுவார். கடிதம் போட்டவர்களின் மனதில் நிறைந்து விடுவார்.

நம்மில் பல பேருக்கு அந்தப் பழக்கம் இல்லை. பதில் எழுத வேண்டும் என்று நினைத்துக் கொண்டே காலத்தைக் கடத்திவிடுவோம். நாம் பதில் போடுவதற்குள் அவர் நேரிலேயே வந்துவிடுவார். மனிதநேயத்தைக் காட்டுவதற்கு கடிதம் ஒரு முக்கியமான சாதனம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கொஞ்சம் அக்கறைவேண்டும் அவ்வளவுதான். இன்று நமக்கு ஒரு கடிதம் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். இன்றே அதற்கு ஒரு பதிலை எழுதிப் போட்டுவிட்டால் அவர் மனதில் நாம் ஒரு தனி இடத்தைப் பிடித்துவிடுவோம்.

இன்னொரு விடயம். கடிதத்தில் தான் இடம் தாராளமாக இருக்கிறதே என்று அதில் புராணம் எல்லாம் எழுதிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அதே நேரத்தில் "நலம் நலமறிய அவா" என்று இரண்டு வார்த்தையில் முடித்துவிட்டு 'இப்படிக்கு' என்று எழுதி கையெழுத்துப் போட்டுவிட்டாலும் அது நன்றாக இருக்காது. ஒரு கடிதம் வளவளவென்று நீளமாகவும் போகக் கூடாது. பொசுக்கென்று இரண்டு வரியிலும் முடிந்துவிடக் கூடாது. அளவாக இருக்க வேண்டும். கருத்துடனும் இருக்க வேண்டும்.

நீங்கள் ஒரு அலுவலகத்தில் வேலை செய்கிறீர்கள். உங்கள் மனைவி தனது தாய் வீட்டுக்குச் சென்றிருக்கிறாா். அவருக்கு கடிதம் எழுதவேண்டும். அந்த நேரம் உங்கள் உதவியாளரை அழைத்து கடிதத்தை டைப் செய்யச் சொல்லி உங்களுக்காக யாராவது கையெழுத்துப் போட்டு அனுப்பினால் அது நன்றாக இருக்குமா? யோசித்துப்பாருங்கள். அலுவலகக் கடிதங்கள் என்றால் டைப் செய்து வேறு ஒருவர் உங்களுக்காகக் கையெழுத்திடலாம். மனைவிக்கோ, நண்பர்களுக்கோ எழுதும் கடிதங்களை நீங்கள் உங்கள் கையால் எழுதவேண்டும் அதுதான் மரியாதை. டைப் செய்யும் கடிதங்களில் இதயம் தெரியாது இயந்திரம் தான் தெரியும்.

கடிதத்தில் எந்த விடயத்தையும் மிகைப்படுத்தக் கூடாது. படிப்பவர்களின் மனம் புண்படக்கூடாது. கன்னா பின்னாவென்று திட்டி எழுதவும் கூடாது. பின்னால் அது இடைஞ்சலாகக் கூட முடியலாம். எதிரான சாட்சியாகவும் அமையலாம். நீங்கள் விளையாட்டாக ஒருவரைக் கொன்று விடுவேன என்று தமாஷாக எழுதுகிறீர்கள். அந்த ஆசாமியை உண்மையாகவே ஒருவர் கொன்றுவிடுகிறார். அதன்பின் நீங்கள் அவருக்கு எழுதிய கடிதம் பொலிஸுக்குக் கிடைக்கிறது. என்ன ஆகுமென்று யோசித்துப் பாருங்கள். நீங்கள் நிரபராதி என்று நிரூபித்துவிடலாம் இருந்தாலும் அவஸ்தைதானே.

உங்களுக்கு வரும் கடிதங்களை ஒரே இடத்தில் ஒழுங்காக அடுக்கிவைக்கலாம். பத்திரப்படுத்த வேண்டியதை பத்திரமான இடத்தில் வைக்கவேண்டும். இது யார் கண்ணில் படப்போகிறது என்று நீங்கள் அலட்சியமாக இருக்கலாம். ஆனால் பட்டு விடும். அதன்பின் உங்களுக்குத் தான் சிரமம்.

இன்னொரு முக்கியமான விடயம் ஆண்கள் பெண்களுக்கு எழுதும்போதும் பெண்கள் ஆண்களுக்கு எழுதும்போதும் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். கவனமாக எழுதவேண்டும். வார்த்தைகளின் அர்த்தம் மாறிவிடக் கூடாது. யதார்த்தமாக நீங்கள் எழுதியிருப்பீர்கள். படிக்கும் போது அதில் புதிதாக ஒரு அர்த்தம் தெரியும். நான் அந்த அர்த்தத்தில் அப்படி எழுதவில்லை என்று பின்னால் அவஸ்தைப்பட வேண்டியிருக்கும். யாருக்கு எழுதும் கடிதமாக இருந்தாலும் சரி... எழுதி முடித்ததும் ஒருமுறை படித்துப் பார்த்துவிடுவது நல்லது. சின்ன எழுத்துப்பிழை கூட விபரீதமான அர்த்தத்தை உருவாக்கிவிடலாம்.

ஒரே நேரத்தில் பல கடிதங்களை எழுதும்போது கவரும் கடிதமும் மாறிப் போய்விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். முகவரி எழுதும்போது அவசரமில்லாமல் தெளிவாக எழுத வேண்டும். சரியான அளவில் முத்திரை ஒட்டவேண்டும். இப்போது சொன்னதெல்லாம் சாதாரணவிடயம் தான். இருந்தாலும் சமயோசிதமாக நடந்துகொள்ள வேண்டிய விடயம்.

ஒரு தபால்பெட்டிக்கு முன்னால் ஒருவர் பரிதாபமாக முழித்துக்கொண்டு நின்றார். "என்ன நடந்தது?" என்று கேட்டார் இன்னொருவர். "ஒரு தவறு நடந்துவிட்டது சார்! ஒரு கவரை இந்தப் பெட்டிக்குள் போட்டுவிட்டேன். ஆனால் அந்தக் கவருக்குள் நான் எழுதிய கடிதத்தை வைக்க மறந்துவிட்டேன் சார்" என்றார்.

இதைக் கேட்டதும் அவர் "நான் கவருக்குள் கடிதத்தை வைத்து மூடி சரியாகத் தான் போட்டேன். இருந்தாலும் ஒரு தவறு நடந்துவிட்டது" என்றார். "அது எப்படி?" என்றார் இவர். "முகவரி எழுத மறந்துவிட்டேன்" என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மாணவர்கள் புத்தகக் கல்வியுடன் நின்றுவிடாது சமூக சேவைகளிலும் ஈடுபட வேண்டும்

## மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி

(சுதுமலை)

பாடசாலை மாணவர்கள் புத்தககல்வி, வகுப்பறைக் கல்வியுடன் மட்டும் நின்றுவிடாது சமூகத்துடன் ஒன்றிய சேவைகள் மற்றும் கல்விசாரா செயற்பாடுகளிலும ஈடுபடுவதன் மூலமே எதிர்கால சமூகத்தை நல்ல நிலையில் உருவாக்க முடியுமென யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்திருக்கிறார்.

யாழ்.மாவட்ட மக்கள் நலன்புரிச்சங்கமும் படையணிகளும் இணைந்து நடாத்திய 15ஆவது நான்கு நாள் தேசியப் பாசறை அண்மையில் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் இ.சற்குருநாதன் தலைமையில் நடைபெற்றது.

இறுதிநாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டபோதே மேலதிக அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது,

இன்று யாழ்.மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் மாணவர்களின் ஒழுக்கம், கீழ்ப்படிவு போன்றவை குறைந்தே காணப்படுகிறது. காரணம் நவீன சினிமாவின் ஆதிக்கம். இன்ரநெற், ஈமெயில், கையடக்கத் தொலைபேசி போன்றவற்றின் தவறான பாதப்புக்கள் அதிகரித்தமையாகும்.

அதுமட்டுமல்லாது நீதிமன்ற பொலிஸ் தரவுகளின் படி பல சமூக விரோதக் குற்றங்கள் நாளுக்குநாள் அதிகரித்துச செல்கின்றன. இதற்கு தற்கால இளைஞர்களே காரணமாக உள்ளார்கள்.

எனவேதான் மாணவர்கள் மத்தியில் நல்ல ஒழுக்கக் கோட்பாடுகள், சிந்தனைகளை வளர்க்க வேண்டியது மிகவும் அவசியமாகவுள்ளது. அவ்வாறான விடயங்களுக்கு இது மாதிரியான பாசறைகள் பெரிதும் உதவக் கூடியவை எனவும் தெரிவித்தார்.

இப் பாசறையில் வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கான பயிற்சிகள், தலைமைத்துவப் பயிற்சிகள் போன்றவை வழங்கப்பட்டன. இவை மாணவர்களின் ஆளுமை விருத்தியை வளர்க்கக்கூடியன எனவும் இவ்வாறான பயிற்சிகளை சகல மாணவர்களும் பெறுவது மிகவும் அவசியம் எனவும் மேலதிக அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.செயலக பிரதேச செயலகங்களின தலைமைப்பீட அரசாங்க அதிபர் வீரபத்திரபிள்ளை, விடுதலைப்புலிகளின் விளையாட்டுப் பொறுப்பாளர் மற்றும் விளையாட்டு உத்தியோகஸ்தர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இத் தேசியப் பாசறை நிகழ்வில் யாழ்.மாவட்ட ஐந்து கல்வி வலயங்களையும் சேர்ந்த 51றகும் அதிகமான பாடசாலைகள் பங்குபற்றின. வெற்றியீட்டிய பாடசாலைகளுக்கு வெற்றிக்கேடயங்களும் பரிசில்கள், சான்றிதழ்கள என்பனவும் பிரதம விருந்தினரால் வழங்கப்பட்டன. (க-7,252)

# கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தை சுவீகரிப்பதற்கு அரசு தயாராகி வருகிறது?

கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய ஊழியர்களுக்கு மூன்று மாதத்திற்குச் சம்பளம் வழங்கவென திறைசேரியிடம 400 மில்லியன் ரூபாவைக் கோரியுள்ளதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே தெரிவித்தார்.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் மா இறக்குமதி செய்து விற்பனை செய்ததில் 25 மில்லியன் ரூபாவை இலாபமாகப் பெற்றுள்ளது.

இந்த இலாபம் மிகவிரைவில் 50 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கும் எனவும் அமைச்சர் நம்பிக்கை தெரிதார்.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் மொத்தம் 4ஆயிரத்து 825 ஊழியர்கள் பணிபுரிகின்றனர். இவர்களில் எவரும் வேலை நீக்கம் செய்யப்படமாட்டார்கள் என உறுதியளித்த அமைச்சர், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தை மிக விரைவில் அரசு சுவீகரிக்கும் எனவும் தெரிவித்தார்.

ஊழல் மோசடி மற்றும் அரசியல் தலையீடற்றதாக மேற்படி நிறுவனத்தைக் கொண்டு நடாத்துவதறகான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். தற்போது மூடப்பட்டுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களை மீள இயங்க வைக்கவும் மூன்று மாத காலத்திற்குச் சம்பளம் வழக்கவுமென 400 மில்லியன் ரூபாவைப் பெற்றுக்கொள்ள திறைசேரியுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தை அரசாங்கம் மீளப்பெறுவது தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவில் சகல கட்சிகளினதும் உறுப்பினர்கள் உள்ளடங்குகின்றனர்.

இக்குழுவின் அறிக்கை கிடைத்ததும் காலம் தாழ்த்தாது இந்த நிறுவனத்தை அரச சுவீகரிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# வெளிவாரி மாணவர்களை சுயமாக இயங்க விடவேண்டும்

(கல்வியங்காடு)

பல்கலைக்கழகத்தினுள் நடைபெறும் எந்தவித பிரச்சினைகளையும் வெளிவாரி மாணவர்களோடு தொடர்புபடுத்த வேண்டாம் என வெளிவாரி பரீட்சை அலகு இணைப்பாளர் இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

அண்மையில் கலைமுதற் தேர்வு வெளிவாரி மாணவர்கள் தமது பரீட்சையை பிற்போட்டதைக் கண்டித்து மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.கேதீஸ்வரனூடாக மகஜர் கையளிக்கப்பட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வாறு மகஜர் கையளிப்பதில் எந்தவித நன்மையும் விளையமாட்டாது. இதைவிடுத்து நீங்கள் செய்யவேண்டிய மிக முக்கியமான செயல் துணைவேந்தரிடம் சென்று பல்கலைக் கழகத்தினுள் நடைபெறுகின்ற எவ்வித பிரச்சினைகளையும் வெளிவாரி மாணவர்களோடு தொடர்புபடுத்த வேண்டாம் என உத்தரவாதம் கேட்பதுதான்.

பரீட்சைகள் நடாத்துவது தொடக்கம் புள்ளிகளை தருவது வரை துணைவேந்தரின் உத்தரவிலேயே தங்கியுளளது. ஒவ்வொரு பல்கலைககழக விரிவுரையாளருமவெளிவாரி மாணவர்களின் வினாத்தாளை பாட்சிப்பதில் அக்கறை காட்டுவதில்லை. இதனால்தான் உங்களுடைய பரீட்சைகளும் மற்றும் பெறுபேறுகளும் வெளியிடப்படுவதில் தாமதம் ஏற்படுகின்றது.

வெளிவாரி மாணவர்கள் வெளிவாரி பரீட்சைகள் அலகோடு ஒத்துப்போவதில்லை. தமது தேவைகளின் பொருட்டுத் தான் இங்கேவந்து போகிறார்கள். எம்மோடு ஒத்துழைத்தால் உங்களுக்கு அந்தந்த வருடத்திற்கு பரீட்சைகள் ஒழுங்காக நடைபெறும். இதில் எவ்வித ஐயமுமில்லை.

அத்தோடு வெளிவாரி மாணவர்களுக்கு இலகுவாகத் தொழிலைப் பெறுவதற்குரிய பாடங்கள் இல்லை. இது மிகப் பெரிய குறையாக உள்ளது. பல்கலைக்கழகத்திற்குள்ளே கடமைபுரியும் நாம் ஆரம்பத்தில் வெளிவாரி மாணவர்களுக்குக் கற்பித்தோம். அதனால் இம் மாணவர்கள அனுபவிக்கும் கஷ்டங்கள், வேதனைகள எமக்கு தெரியாததல்ல. ஆகவே மாணவர்கள் எல்லோரும் எம்மோடு ஒத்துழைத்து நின்றால் வெற்றி நிச்சயம் என்றார். (ஜ-74)

## நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

(சுதுமலை)

நல்லூர் பிரதேச செயலக பிரதேச ஒருக்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக இக்கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது. இதனால் கல்வி, சுகாதாரம், விவசாயம், சுற்றுப்புறச்சூழல், கால்நடை போன்ற சகல திணைக்களத் தலைவர்களையும் மற்றும் பிரதேசசபை, மின்சாரசபை போன்றவற்றின் தலைவர்களையும் இவ் வருடத்தில மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி தொடர்பான செயற்திட்டங்களுடன் சமுகமளிக்குமாறு பிரதேச செயலா கேட்டுள்ளார்.

அத்துடன் இப்பகுதி கிராமசேவை உத்தியோகத்தர்களையும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் இக்கூட்டத்தில் கட்டாயம் கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (க-7,252)

## ஆன்மீக உரை

(சாவகச்சேரி)

வடபிராந்திய பகவான் சத்தியசாயி சமித்தியினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட ஆன்மீக உரை இன்று பிற்பகல் 4.00மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆன்மீக உரையினை சத்தியசாயிபாபா உயர் கல்வி படிப்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அனில்குமார் நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வுக்கு வடபிராந்திய சாயி சமித்தியின் தலைவர் வசந்தசேனன் வரவேற்புரையையும் டாக்டர் எஸ்.சிவனேசன் அறிமுகவுரையையும் திருமதி கோகிலா மகேந்திரன் நன்றியுரையையும் ஆற்றவுள்ளனர். ஆனமீகவுரையினைத் தொடர்ந்து கலாச்சார நிகழ்வுகளும் மங்கள ஆரத்தியும் நடைபெறவுள்ளது.

ஆன்மீகவுரையின் தமிழ்மொழி மூலமான தொகுப்புரையை டாக்டர் இ.கணேசமூர்த்தி வழங்கவுள்ளமை குறிப்பிடததக்கது. (க-7,47)

# பார்த்திப வருட

## கும்பம்

செய்யும் காரியத்தை சிறப்பாகவும் செம்மையாகவும் செயல்படுத்தும் உங்களுக்கு கடந்த கால சோதனைகள் எல்லாம் இவ்வாண்டில் படிப்படியாக குறைந்து ஏற்றமிகு பலன் அடைவீர்கள். உங்கள் ராசியாதிபதி சனி பகவான் வரும் 26.05.2005 முதல் 6 ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பது மிகவும் அற்புதமான அமைப்பாகும். உங்கள் பலம் பலமடங்கு கூடி எதிரிகளின் பலம் குறையும் காலமாகும். கடந்த கால சோதனைகளையெல்லாம் இவ்வாண்டில் படிப்படியாகக் குறைந்து ஏற்றமிகு பலன் அடைவீர்கள். உங்கள் ராசியாதிபதி சனிபகவான் வரும் 26.05.2005 முதல் 6 ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பது மிகவும் அற்புதமான அமைப்பாகும். உங்கள் பலம் பலமடங்கு கூடி எதிரிகளின் பலம் குறையும் காலமாகும். கடந்தகால வம்பு வழக்குகள் அனைத்தும் குறையும். ஆண்டின் தொடக்கத்தில் அஷ்டமத்தில் குரு இருந்தாலும் 28.09.2005 முதல் குரு பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்க இருப்பது உங்களுக்கு அனுகூலமான பலனை ஏற்படுத்தும். இவ்வாண்டு தொடக்கத்தில் குரு சஞ்சாரத்தால் சிறுசிறு நெருக்கடிகளை நீங்கள் எதிர்கொண்டாலும் சனி 6இல் சஞ்சரிப்பதால் எதையும் எதிர்கொள்ளும் வலிமை பெறுவீர்கள். பொதுவாக பார்த்திப வருடத்தைப் பொறுத்தவரை சனி மாற்றம் உங்களுக்கு ஒரு ஏற்றத்தினையும் குரு மாற்றம் மிகப்பெரிய ஏற்றத்தினை ஏற்படுத்தும் அமைப்பாகும்.

**உடல் நிலை :** உங்களின் உடல் நிலையில் மந்தமான நிலை படிப்படியாக மாறி மிகவும் சிறப்பான பலத்தையும் வலிமையையும் அடைவீர்கள். மனைவி மற்றும் குழந்தைகளின் உடல் நிலையில் சோர்வுகளும் மளமளவென மறையும். உங்கள் வெளியு,ர் பயண அலைச்சல்கள் மறைந்து அனுகூலமான பலன்களை அடைவீர்கள். மருத்துவச் செலவுகள் மிகவும் குறைந்துவிடும். பிற்பாதியில் அற்புதமான ஏற்றப்பலன்களை அடைவீர்கள்.

**உத்தியோக நிலை:** இதுவரையிலும் தடைப்பட்டு வந்த பதவி ஊதிய உதவிகளை இவ்வாண்டில் கண்டிப்பாக அடைவீர்கள். விரும்பிய இடமாறுதல் சற்றே அலைச்சல்களை ஏற்படுத்தினாலும் படிப்படியாக குடும்பத்துடன் சேர்ந்து வாழும் யோகம் அமையும். அதிகாரிகளின் முழு ஒத்துழைப்பு சிறப்பாக அமையும். புதிய வேலை வாய்ப்புகள் கற்ற கல்விக்கு ஏற்றபடி அமையப்பெற்று மனமகிழ்ச்சி உண்டாகும். வெளியு,ர்ப் பயணம் அற்புதமான பலன் தரும்.

**தொழில் வியாபாரம்:** செய்யும் தொழில் வியாபார நிலையில் தொடக்கத்தில் சற்றே மந்தமான சூழ்நிலைகள் அமையப்பெற்றாலும் பிற்பாதியில் அற்புதமான வளர்ச்சியும் இலாபமும் அமையப்பெறும். பெரிய முதலீடுகளில் அபிவிருத்தி செய்வீர்கள். கூட்டுத்தொழிலில் மிகவும் அற்புதமான ஏற்றபலனை அடையமுடியும். எஜென்ஸி கண்றாக்ட் போன்றவற்றில் முதலில் சிறுசிறு சோதனைகள் ஏற்பட்டு பின்பு அற்புதமான உயர்வினை ஏற்படுத்தி புரிப்பு அடையச் செய்யும்.

**பெண்களுக்கு:** சுறுசுறுப்பும் புத்துணர்வுடனும் செயல்படுவீர்கள். சோர்வுகள் விலகும். உடல் நலம் சீரடையும். மனை வீடு, வண்டி வாகன யோகம் கிட்டும். கணவன் மற்றும் கணவர் வீட்டு உறவினர்களிடம் சிறப்பான உதவியும் அன்னியோன்யமும் உண்டாகும். தடைப்பட்ட திருமண சுபகாரியங்கள் தடபுடலாக அமையப்பெறும். புத்திர பாக்கியம் கிட்டும். பணிபுரியும் பெண்களுக்கு சிறப்பான ஊதிய பதவி உயர்வுகளைப் பெறுவார்கள்.

**பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு:** அரசியலில் உயர் பதவிகள் பிற்பாதியில் தேடிவரும். உடனிருப்பவர்களிடம் சற்று கவனமாக முற்பாதியில் செயல்படுவது உத்தமம். சிலருக்கு வெளியு,ர் வெளிநாட்டுப் பயணம் சிறுசிறு அலைச்சலை ஏற்படுத்தினாலும் பிற்பாதியில் பிரமாதமான உயர்வினைச் சந்திப்பீர்கள்.

**கொடுக்கல் வாங்கல்:** கொடுக்கல் வாங்கலில் முற்பாதி சாதகமற்று இருந்தாலும் பிற்பாதியில் சிறப்பாகவும் சரளமாகவும் அமையப் பெற்று பிரமாதமான பணவரவுகள் அனுகூலங்களையும் பெரிய மனிதர்களின் உதவி ஆதரவுகளைப் பெற முடியும்.

**விவசாயிகளுக்கு:** விலை பொருட்கள் மந்தமாக விற்பனை ஆனாலும் கூட போகப் போக மளமளவென விற்றுத் தீரும். சிறப்பான விலையினையும் பெற்று இலாபம் காண்பீர்கள். பெரிய அளவில் விவசாயப் பணிகளைப் பிற்பாதியில் மேற்கொண்டால் சிறப்பான இலாபம் அமையும். அரசு மூலம் மானிய உதவிகள் பிற்பாதியில் அமையப் பெற்று உயர்வினைப் பெறுவீர்கள்.

**மாணவர்களுக்கு:** கல்வியில் நீங்கள் நினைத்ததை சாதிக்க சில சிறுசிறு இடையு,றுகள் ஏற்பட்டாலும் கூட உங்களது திறமைகளால் பிரமாதமான மதிப்பெண்களையும் சாதனைகளையும் படைத்து முன்னேற்றம் அடைவீர்கள். பெற்றோர் ஆசிரியர்களின் ஆதரவு சிறப்பாக அமையும். உல்லாசப் பிரய்ாணம் செல்லும் அமைப்பு எற்படும்.

### 14.04.2005முதல் 25.05.2005வரை

அஷ்டமத்தில் உள்ள குருபகவான் வக்கிரம் பெற்றிருப்பதால் உங்கள் சோதனைகள் எல்லாம் படிப்படியாகக் குறையும். உடல் நலம் சற்றுத் தேறிவிடும். மருத்துவச் செலவுகள் குறையும். மனைவி மற்றும் புத்திரர்களின் உடல் நலம் சுமாராக அமையும். பொருளாதார நிலையில் படிப்படியான உயர்வினை அடைவீர்கள். தனவரவுகள் சுமாராக வரும். வண்டி வாகனத்த்தைப் பழுது பார்க்க முடியும். கணவன், மனைவி உறவு திருப்தி தருவதாக அமையும். திருமண சுபகாரியம் முயற்சி செய்தால் நற்பலன்கள் அமையும். தொழில் வியாபார நிலையில் படிப்படியான உயர்வை அடைவீர்கள். கூட்டுத்தொழில் வியாபாரம் அனுசரித்துப் போனால் சிறப்படையும். உத்தியோக நிலையில் அடிக்கடி வெளியு,ர்ப் பயணம் ஏற்பட்டாலும் அதன்மூலம் அனுகூலப்பயனை அடைய முடியும். புதிய வேலைவாய்ப்புகள் அமையும். அரசியல்வாதிகளுக்கு பெயர் புகழ் கூடும். மாணவர்களின் கல்வியில் ஏற்றமுண்டாகும்.

### 26.05.2005முதல் 27.09.2005வரை

6 ஆம் வீட்டில் சனி சஞ்சரிப்பதால் எத்தகைய சோதனைகளையும் எளிதாக வென்று சிறப்பான ஏற்ற பலன்களை அடைவீர்கள். மனதில் இருந்த குழப்பங்கள் விலகிவிடும். குடும்பத்தில் வீண் செலவுகளும் மருத்துவச் செலவுகளும் மறைந்து சேமிப்புப் பெருகும். பொருளாதார நிலையில் பிரமாதமான தனவரவுகளால் பட்ட கடன்களை அடைத்துவிடுவீர்கள். வண்டி வ்ாகனம் வாங்கிடும் அமைப்பும் வீட்டைக் கட்டி குடிபுகும் அமைப்பும் ஏற்படும். தொழில் வியாபார நிலையில் மறைமுக எதிரிகள் பயந்து ஒதுங்குவார்கள். பலசாலியாக அமைவீர்கள். கொடுக்கல் வாங்கலில் பிரமாதமான நற்பலன்களை அடைவீர்கள். வம்பு வழக்குகளில் வெற்றிமேல் வெற்றிகிட்டும். உத்தியோகத்தில் நீண்டநாட்களாக தடைப்பட்ட பதவி உயர்வுகளைப் பெறுவீர்கள். வெளிநாட்டுப் பணியும் திட்டமிட்டபடி அமையும். மாணவர்களுக்கு மேற் கல்வி அமையும்.

### 28.09.2005முதல் 22.11.2005வரை

சனிபகவான் 6 ஆம் வீட்டிலும், குருபாக்கியஸ்தானத்திலும் சஞ்சரிப்பது மிக அற்புதமான அமைப்பாகும். உங்களது வாழ்வில் இக்காலம் ஒரு பொற்காலம் என்றே கூறிவிட முடியும். உடல் நலனில் பலமும் வளமும் கூடிப் பலசாலியாக அமைவீர்கள். எதிர்ப்பு இல்லாத நிலை பு,ரிப்பை ஏற்படுத்தும். மனைவி சிறப்பான ஆரோக்கியமுடனும் சிறப்பான புத்திர பாக்கியத்தையும் அடைவாள். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். உற்றார் உறவினர்களின் வருகை மகிழ்ச்சியையும், திருமண சுபகாரியத்தை தடபுடலாக நடத்தவும் உதவும். தொழில் பொருளாதார நிலையில் மிகப்பெரிய அளவில் வளர்ச்சியையும் தனசேர்க்கையும் இலபமும் அமையப் பெறும். கூட்டுத்தொழில் பிரமாதமாகும். உத்தியோக நிலையில் அற்புதமான பதவிகளை கௌரவமாக வகித்தடும் யோகம் அமையும். மாணவர்களுக்கு வெற்றிமேல் வெற்றி பு,ரிப்படையச் செய்யும். விவசாயம் மிக அற்புதமாக அமையும்.

### 23.11.2005முதல் 05.03.2006வரை

குருபகவான் பாக்கியஸ்தானத்தில் சஞ்சரித்தாலும் 6 இல் சனிவக்கிரம் பெற்றிருப்பதால் இக் காலத்தில் சிறுசிறு உடல் உபாதைகளையும் மறைமுகப் போட்டி பொறாமைகளையும் சற்றே சமாளிக்க வேண்டிய காலமாக அமையும். சிறிதளவு மருத்துவச் செலவுகளுக்கு பின்பே மனைவி உடல்நலம் தேறும். புத்திரர்கள் சற்று சோர்வடைவார்கள். பொருளாதார நிலையில் ஆரம்பத்தில் சங்கடமான நிலை காணப்பட்டாலும் பிரமாதமாக அதனை சமாளித்து உயர்வினை அடைந்துவிடுவீர்கள். உங்களது திறமைகளால் தொழில் வியாபார நிலையில் பிரமாதமான வளர்ச்சியையும் இலாபத்தினையும் அடைவீர்கள். கூட்டுத்தொழில் வெளிநாட்டுத் தொடர்புடையவர்களில் நல்ல ஏற்றம் முன்னேற்றம் அமையும். உத்தியோக நிலையில் பதவி ஊதிய உயர்வுகள் அமையும். அரசியலில் உயர் பதவிகள் கிட்டும். மாணவர்களுக்கு பரிசும் பாராட்டும் அமையப் பெறும்.

### 06.03.2006 முதல்13.04.2006வரை

பிரதான கிரகங்களான சனி குரு வக்ர கதியில் சஞ்சரிப்பதால் உங்களுக்கு சோதனைகளை அடைய நேரிடும். மனதில் பலவித குழப்பங்களும் தேவையற்ற சில மறைமுக மனக்குழப்பம், அலைச்சல் உண்டாகி உடல்நலம் கெடும். மனைவி வழியிலும் மதவிடாய்க் கோளாறுகள் ஏற்படும். பிள்ளைகளால் வீண்குழப்பம் உண்டாகி கணவர், மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றும். உற்றார் உறவினர்கள் நண்பர்கள் வெளிவட்டார பழக்கம் நன்மை தராது. திருமண சுபகாரியம் தடைப்படும். பொருளாதார நிலையில் நெருக்கடிகளும் சோதனைகளும் உண்டாகும். தொழில் வியாபார நிலையில் சங்கடமும் மறைமுக எதிரிகளால் இலாபம் குறையும். சூழ்நிலையும் நல்ல வேலையாட்கள் விலகிச் செல்ல கூட்டுத்தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்துப் போக முடியாத நிலை உருவாகும். உத்தியோக நிலையில் எதிர்பாராத இடமாறுதலும் அதிகாரிகளிடம் மனஸ்தாபமும் உண்டாகி மனஅமைதி குறையும்.

## நட்சத்திர பலன்கள்

### அவிட்டம் 3,4ம் பாதம்

நீங்கள் உங்கள் உடல் நலனில் சற்று அக்கறை செலுத்தினால் படிப்படியாக பலமும் வலிமையும் கூடி சிறப்பான உடல்நலம் அமையப்பெறும் மருத்துவச் செலவுகள் மற்றும் வீண்செலவுகளை [illegible] பாதியில் சிறிதளவு ஏற்க நேரிட்டாலும் பிற்பாதியில் யாவும் விலகி சேமிப்புகள் அதிகம் பெருகும். திருமண சுப காரிய முயற்சிகள் பிற்பாதியில் தடபுடலாக நிறைவேறி மனமகிழ்ச்சியை ஏற்படுத்தும். புத்திர பாக்கியமும் அமையும். தொழில் வியாபார நிலையில் மந்தமான நிலைகள் மாறி மளமளவென இலாபமும் ஏற்றமும் அபிவிருத்தியும் ஏற்படும். கூட்டுத்தொழிலில் நம்பிக்கை நாணயம் உருவாகும். எடுக்கும் காரியம் யாவும் சிறப்பான முன்னேற்றத்தினை அடைவீர்கள்.

# பொதுப்பலன்கள்

### சதயம

இக்காலத்தில் குடும்பத்தில் இருந்த குழப்பமான நிலை விலகி படிப்படியாக ஒற்றுமையும் சிறப்பான உயர்வினையும் அடைவீர்கள். கணவன், மனைவி இடையே நிலவி வந்த சுணக்கமான நிலை மாறி ஒற்றுமையுடன் காணப்படுவீர்கள். விரோதமானவர்கள் கூட ஒற்றுமையுடன் வருவார்கள். வெளியு,ர்ப் பயணம் அனுகூலப் பலனை அடைவீர்கள். தொழில் வியாபார நிலையில் அற்புதமான அபிவிருத்தியும் ஏற்றமும் ஏற்படும். கூட்டுத்தொழிலில் கூட்டாளிகளின் நம்பிக்கை வளரும். உத்தியோக நிலையில் பதவி ஊதிய உயர்வுகள் சிறப்பாக அமையப்பெறும். அரசியலில் பதவிக்கு நிலவிய நெருக்கடிகள் விலகி உயர் பதவியை வகிக்கும் யோகம் அமையப் பெறும்.

### புரட்டாதி 1, 2, 3

கொடுக்கல் வாங்கலில் முற்பாதியில் சற்றுக் கவனமாகச் செயல்பட்டால் பிற்பாதியில் பிரமாதமான சரளமான நிலைகளும் பெரிய மனிதர்களின் உதவியும் அமையப்பெறும். பு,ர்வீகச் சொத்து வம்பு வழக்குகள் ஆண்டின் இறுதியில் வெற்றிமேல் வெற்றியை ஏற்படுதகும். உத்தியோக நிலையில் எண்ணியபடியயே பதவி ஊதிய உயர்வினை அடையும் காலமாக இவ்வாண்டு இருக்கும். புதிய நிரந்தரமான வேலை முயற்சி செய்தால் தாமதித்துக் கிடைக்கும். தொழில் வியாபாரம் கூட்டுத்தொழில் ஏஜென்ஸி, கண்றாக்ட் போன்றவற்றில் படிப்படியான உயர்வுகளும் பெரிய முதலீடுகளால் அபிவிருத்தியையும் செய்துவிட முடியும். மாணவர்கள் கல்வியில் சிறப்பான வெற்றிகளை அடைவார்கள். விவசாயிகளுக்கு கடன் தொல்லைகள் விலகும்.

### அதிர்ஷ்ட குறிப்புகள்

அதிர்ஷ்ட திகதிகள்: 2,5,7,12,16,20,25,31
கிழமை: சனி
நிறம் : நீலம்
தெய்வம்: ஐயப்பன்
திசை : மேற்கு
கல் : நீலக்கல்

**பரிகாரம்:** உங்கள் ராசிக்கு 28.09.2005 வரை குருபகவான் அஷ்டமத்தில் சஞ்சரிப்பதால் குரு ப்ரீதி ஏழைப் பிராமணர்களுக்கு உதவி செய்வது, ஆடை தானம் செய்து தட்சணாமூர்த்தியை வியாழக்கிழமைகளில் தரிசிப்பது உத்தமம். உங்களுக்கு 2ல் இராகு 8ல் கேது சஞ்சரிப்பதால் செவ்வாய், ஞாயிற்றுக் கிழமைகளில் இராகுகாலப் பு,சை, சர்வேஸ்வரரை வழிபாடு செய்வது, பாம்புப் புற்றுக்கு பால் வார்ப்பது, சர்ப்ப சாந்தி செய்து வருவதும் குடும்பவாழ்வில் ஏற்படும் சோதனைகளைக் குறைத்து ஏற்றத்தினை ஏற்படுத்தும். (தொடரும்)

பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு - குறள்

வலம்புரி

# தடுக்க முன்வருக!

இலங்கைத்தீவில் இப்பொழுது எது மலிவானது என்றால் பண்டங்களல்ல. மனித உயிர்தான் அது வென, மனிதநேயம் கொண்டவர்கள் ஆதங்கப்படுகின்றனர்.

நாட்டில் கொழுந்துவிட்டெரிந்த யுத்தம் வகை தொகையின்றி மனித உயிர்களைக் காவுகொண்டது. அதனைத் தொடர்ந்து வந்த ஆழிப்பேரலை அனர்த்தமும் பெரும் மனிதப் பேரவலத்தை மாறாத வடுவாக ஏற்படுத்திச் சென்றுள்ளது.

இவ்வாறு தொடர்ந்தும் தொடர்ந்தும் இலங்கைத் தீவில் மரணஓலம். கொழுந்துவிட்டெரிந்த யுத்தத்தீ சமாதானம் என்ற போர்வையில் நீறுபூத்த நெருப்பாக அடங்கியிருக்கிறது.

நாட்டின் இன்றைய தெளிவற்ற நிலைமை நிரந்தர சமாதானம் ஏற்படுமா? அல்லது மீண்டும் முருங்கைமர வேதாளக் கதையாக யுத்தம் வெடிக்குமா? என்பது புரியாமலும், புலப்படாமலும் குழம்பிப்போயிருக்கும் விடயமாகக் காணப்படுகிறது.

இந்நிலையில் தொடரப்போவது என்ன என்பது மாயையாகவே தொடர்கிறது. இந்நிலை மாறுமா இல்லையா என்பது ஒருபுறமிருக்க, மனித உயிர்களின் அழிவு மாத்திரம் அழியும் வடிவம் மாறி தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

யுத்தத்தால் தொடர்ந்த மரணங்கள், உயிரின் பறிப்புக்கள் குறைவடைந்துள்ள போதிலும் விபத்து வடிவில் மரணஓலம் தொடர்கிறது. இந்நிலை சபிக்கப்பட்ட பூமியா இதுவென்று எண்ணத் தோன்றுகின்றது. மனித உயிரின் முக்கியத்துவம் உணரப்படாமலே இத்தகைய மரணங்கள் ஏற்படுகின்றன.

யாழ். குடாநாட்டில் தற்போது பெருகிவரும் விபத்து மரணங்கள் இதனையே உணர்த்துகின்றன. விபத்து மரணங்கள் அதிகரிப்பதற்கான காரணங்களை நோக்குவதும், அலசப்படுவதும்தான் இதனைத் தடுக்கும் மார்க்கமாக அமையமுடியும். பதிலாக இங்கு குற்றங்கண்டு பிடிப்பதும், சட்டத்தை கையில் எடுப்பதும் தவறான விளைவையே ஏற்படுத்தும்.

குடாநாட்டில் ஏ9 பாதை திறக்கப்பட்டதை அடுத்து வாகனங்களின் எண்ணிக்கையும், நெரிசலும் அதிகரித்துள்ளது. ஆனால் வீதிகள், துணைவீதிகள் அதிகரிக்கப்படவுமில்லை, அகலமாக்கப்படவுமில்லை.

மேலும் பாதசாரிகள், வாகனசாரதிகள் பலருக்கு வீதி ஒழுங்கு நடைமுறைகள் பற்றிய போதிய அறிவும் காணப்படவில்லை. அத்துடன் வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரின் சேவையும் விஸ்தரிக்கப்படவில்லை. முக்கிய சந்திகள் நகரங்களில் வீதிக் குறிகாட்டிகள், சமிக்ஞைகள் பயன்படுத்தப்படவில்லை. இத்தகைய நிலைமைகள் விபத்துக்களையும், அதனால் ஏற்படும் மரணங்களையும் அதிகரித்துச் செல்கின்றன.

இதனைவிட வாகன சாரதிகளின் நான்முந்தி நீமுந்தி என்ற போட்டி, மதுபான பாவனை, கையடக்க தொலைபேசிப் பாவனை, கட்டுப்பாட்டை மீறுகின்ற வேகம் போன்றவையும் விபத்துக்களையும், மனித உயிர்களின் பறிப்புக்களையும் அதிகரிக்கின்றன.

மேலும் தம்மை சினிமாக் கதாநாயகர்கள் எனக் கருதும் வாலிபர்கள் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது வீதியொழுங்கைப் பின்பற்றாமல் காட்டுகின்ற அசகாய சாகசங்களும்கூட மனித உயிர்களின் அழிவுக்கும், விபத்துக்களுக்கும் காரணமாகின்றன. ஒட்டுமொத்தமாக விபத்துக்களுக்கும், அதனால் ஏற்படுகின்ற மரணங்களுக்கும் இத்தகைய காரணங்களும், ஏதேச்சையான கவனக்குறைவும் வழிவகுக்கின்றன.

இதனால் இவற்றை வாகன சாரதிகள், பாதசாரிகள், சமூகப் பொறுப்புவாய்ந்தோர் அனைவரும் உணர்ந்து இத்தகைய அநியாய உயிரிழப்புக்களைத் தடுக்க முன்வருவோமாக.

மனித உயிரின் மகத்துவத்தை உணர்ந்து, அதனை மதித்து பொறுப்புணர்வுடன், சமூகக் கட்டுமானத்தை உள்வாங்கி வாழ்வியலை ஒழுங்குபடுத்துவோமாக.

# புலிகளுடன் போர்தொடுக்கப்போவதாக அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா விடுக்கும் மிரட்டல்களை எண்ணி அழுவதா? சிரிப்பதா?

ஈழவேந்தன் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

**உவகைப் பெருக்குடன் ஆனையிறவு வெற்றியை கொண்டாடிய நாம் நேற்று முன்தினம் அனைத்துச்செய்தி இதழ்களிலும் 80ஆயிரம் சிங்களப் படை வீரர்கள் இதுவரை தப்பியோடியுள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பகிரங்கமாக எடுத்துக்கூறியதை எண்ணிப்பார்க்கும்போது இரட்டிப்பு மகிழ்ச்சியில் மூழ்கியுள்ளோம்.**

**இவ்வேளையில், முன்னாள் தலைமை அமைச்சரும் இந்நாள் பதில் பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்ரமநாயக்கா விடுதலைப் புலிகளுடன் போர் தொடுக்கப்போவதாக அடிக்கடி அச்சுறுத்துவதைப் பார்த்து நாம் அழுவதா சிரிப்பதா எனத் தெரியாது தத்தளிக்கின்றோம் எனக் கூறுகிறார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன்.**

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் இதுகுறித்து குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"கடந்த 20ஆண்டுகளில் அதாவது 1983ஆம் ஆண்டு தொடங்கி 2003ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில 80 ஆயிரத்து 661படைவீரர்கள் இராணுவத்திலிருந்து தப்பியோடியுள்ளனர். அதில் 10ஆயிரத்து 292பேர் தற்போது சட்ட பூர்வமான பதவி விலகலையும் பெற்றுச்சென்றுள்ளனர்.

இப்படையிலிருந்து வெளியேறியவர்கள் பலர் தமது சொந்தப் பிரச்சினை காரணமாகவே கடமைக்குத் திரும்பமுடியாது உள்ளனர். சிலர் திட்டமிட்டுச் தப்பிச் செல்கின்றனர். குற்றச் செயலிலும் ஈடுபடுகின்றனர்.

இது ஒருபுறம் இராணுவத்திற்கு அபகீர்த்தி ஏற் படுத்துவதை நான் ஏற்றுக்கொள்கின்றேன்" என இராணுவப் பேச்சாளர் தயாரட்நாயக்க இராணுவத்தின் பரிதாபகரமான இந்நிலையை ஒளிவு மறைவின்றி எடுத்துரைத்துள்ளார். இராணுவப் பேச்சாளர் இக் கசப்பான உண்மையை எடுத்துரைத்ததற்கு ஈழத் தமிழ் மக்கள் சார்பில் எம் நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றோம் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள அரசு கொடுக்கின்ற கூலிக்காகவும் வழங்குகின்ற பதவிக்காகவும் விரும்பியோ விரும்பாமலோ சிங்கள இளைஞர்கள் படையில் சேர்ந்துள்ளனர். இப்படையில் சேர்ந்துள்ளோரில் 95 விழுக்காட்டிற்கு மேற்பட்டோர் மிக ஏழ்மை நிலையிலுள்ள மக்களே. மாறாக இவர்கள் சிங்கள இனத்தைக் காப்பாற்றுவதற்காக சேர்ந்தபடை அல்ல. இவர்கள் கூலிப் படைகள் மட்டுமே. ஆனால் விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் படையில் அங்கம் வகிக்கும் வீரர்கள் படையை விட்டு ஒளித்தோடியதாக எமக்கு செய்திகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. எம்மைத்தாக்கிப் பேசும் மாற்றார் கூட இவ் உண்மையை ஒத்துக்கொள்கின்றனர். சிங்களப் படையில் சேர்ந்திருப்போர் நிர்ப்பந்த நிலையில் சேர்க்கப்பட்ட படைவீரர்களாக இருக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்துள்ளோர் தம் உயிரை துச்சமென்று மதித்துப் போராடும் தியாக உள்ளம்கொண்ட வீரர்களே. எம் நாட்டை மீட்பதற்காகப் போராடி 21துயிலும் இல்லங்களில் துயிலும் தியாகிகள் எண்ணிக்கை ஏறக்குறைய 18 ஆயிரத்தை எட்டியுள்ளது.

இதேவேளை, சிங்கள வெறியாட்டத்தின் கைப்பொம்மைகளாக இயங்கியுள்ளவர்களே உயிரிழந்துள்ளனர். தேவையற்ற நிலையில மரணத்தை அரவணைத்த இவர்களுக்காக நாம் உண்மையில் இரங்குகின்றோம்.

எமது விடுதலை புலிகளோ, அமைதி வழியில் பிரச்சினையைத் தீர்க்கமுடியாத நிலையில் ஆயுதம் தாங்கி பொருள் பொதிந்த நிலையில் போராடி மடிகின்றனர். கடந்த 22ஆம் திகதி அகிலத்தின் கவனத்தை ஈர்த்த ஆனையிறவுப் போராட்ட வெற்றியை நாம் கொண்டாடினோம்.

எவன் கையில் ஆனையிறவு உண்டோ, அவனகையில் யாழ்ப்பாணம இருக்கும் என்று கூறுமளவிற்கு ஆனையிறவு வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது. இன்று அது எம் கைவசமுள்ளது. ஆனையிறவில் தமக்கு ஏற்பட்ட தோல்வியைக் கண்டு சிங்கள அரசு நடுங்கியது. ஆனையிறவுப போரில் மடிந்த சிங்களப் படைவீரர் எண்ணிக்கையை கணக்கிடுவது கடினம். ஒளித்தோடிய எண்ணிக்கையும் அதைவிட மிஞ்சியதாக இருந்தது.

ஆனையிறவில் விடுதலைப்புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களோ நாம் எந்த நாட்டிலும் கொள்வனவு செய்யமுடியாத அளவிற்கு கோடானு கோடி பெறுமதி வாய்ந்தவையாகும். அதனால் சிங்களப்படை நடுங்க, சிங்கள அரசு நிலைதடுமாறி ஈடாடியது. இப்போரினால் நாம் பெற்ற வெற்றி ஒருபுறம் இருக்க நாம் ஆயுதப்பலம் பெற்றவர்களாகவும் மாறியதை அனைவரும் அறிவர். நாட்டை வழிநடத்துவோர் வரலாற்றிலிருந்து பாடம் படித்தல் வேண்டும். ஆனால் வரலாற்றில் இருந்து பாடம் படிகக மறுப்போர் வரலாற்றில் தாம் பட்டுணர்ந்த துன்பங்களை விட மேலும் மேலும் தள்ளப்படுவது உறுதி.

80 ஆயிரம் படையினர் தப்பியோட்டம் என சிங்களப்படைத் தளபதி கூறுகின்ற இவ்வேளையில், தமிழருக்குப் பொதுக் கட்டமைப்பை வழங்கின் தம் பதவியைத் துறப்பதோடு படையையும் நடத்துவோம் என்று பொருளற்ற முறையில் கொக்கரிக்கும் ஜே.வி.பியினர் இனியாவது பாடம் படிப்பார்களா? அல்லது தம் அழிவை அரவணைக்க ஆயத்தமாவார்களா? என்பதை அறிய விரும்புகின்றோம் என தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (சு4)

# அதிக விளைச்சலைதரும் கரும்புகளை அறிமுகம்செய்வதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

விவசாயிகள் மத்தியில் அதிக விளைச்சல்தரும் கரும்புப் பயிர்களை அறிமுகம்செய்து கரும்புப் பயிர்ச்செய்கையில் பெருமளவு விவசாயிகளை ஈடுபடுத்துவதற்கு கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் துரித நடவடிக்கை எடுத்துள்ளது.

முதல்கட்டமாக சீனி உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் அதிக விளைச்சல் தரக்கூடிய கரும்பு வகைகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளதாகவும் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

பொல்வத்த, செவனகெல தொழிற்சாலைகள் சார்ந்ததாக வேலைசெய்யும் விவசாயிகள் மத்தியில் நோய்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய கரும்பு வகைகள் அறிமுகம் செய்து வைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவவிரண்டு தொழிற்சாலைகளிலிருந்தும் உற்பத்தி செய்யப்படும் சீனி, நாட்டின் மொத்த தேவையில் 10சதவீதத்தை மாத்திரமே பூர்த்திசெய்கின்றது. ஒவ்வொரு வருடமும் ஐந்தரை இலட்சம் தொன் சீனி தேவைப்பட்டாலும் தொழிற்சாலைகளில் 55ஆயிரம் மெற்றிக்தொன் சீனியே உற்பத்தி செய்யப்படுகின்றது.

இதன் காரணமாக வருடாத்தம் சீனியை இறக்குமதி செய்தறகாக ஆயிரத்து 200கோடி ரூபா செலவாகின்றது என நிறுவனத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார். (க-9)

# பூட்டான் சுகாதார சேவைகளை மேம்படுத்த இலங்கை இணக்கம்

(கொழும்பு)

பூட்டான் நாட்டின் சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான சகல உதவிகளையும் வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதற்குத் தேவையான உடன்பாட்டில் இலங்கை சுகாதார பராமரிபபு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும், பூட்டான சுகாதார அமைச்சர் வியங்க்போ ஜிக்மி சிங்கேயும் கையெழுத்திட்டுள்ளனர். மேற்படி உடன்படிக்கைப்படி இலங்கையின் மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் பூட்டான் நாட்டு மாணவர்களுக்கு மருத்துவப் பட்டம் வழங்கவும், அரசாங்க ஆஸ்பத்திரிகளில் உள்ளகப் பயிற்சி வழங்கவும் பட்ட மேற்படிப்புக்கு இடமளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பூட்டான் நாட்டு மாணவர்கள் 39பேர் இலங்கையிலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் கல்வி கற்கின்றனர். அந்நாட்டிற்கு அவசரமாகத் தேவைப்படும் மகப்பேற்று, பரசவ சத்திரசிகிச்சை உணர்விழக்கச்செய்தல், தோல் சிகிச்சை ஆகிய துறைகளில் கற்க இவர்களுக்கு அதிக இடமளிக்கப்படும் என்று இலங்கை சுகாதார அமைச்சின அதிகாரியொருவர் தெரிவித்தார். அதேநேரம், இலங்கைத் தாதியர், ஆய்வு கூடப் பரிசோதகர், கதிரியக்கப் படப்பிடிப்பாளர் ஆகியோருக்கு பூட்டான் நாட்டில் வேலை வாய்ப்பு வழங்கவும் இணக்கம் காணபப்ட்டுள்ளது எனவும் அவ்வதிகாரி கூறினார். (க)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

உலகில் வாழ வேண்டும். அதற்குவேலை செய்தாகவேண்டும். கடமைகளைச் செய்யாமல் யாரும்வாழ முடியாது. எந்த வேலையைச் செய்தாலும அதற்கு விளைவு ஒன்று உள்ளது. அது நல்லதாகவோ, கெட்டதாகவோ இருக்கலாம். இரண்டும் கலந்ததாகவும் இருக்கலாம். ஆனால்விளைவு ஒன்று இருந்தே தீரும்.

சுவாமி விவேகானந்தர்

# சுனாமி உதவி வழங்கும் மாநாடு காலியில் நடைபெற வேண்டும்

## ரணில் கோரிக்கை

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு நிதியுதவிவழங்கும் வெளிநாடுகளின் மாநாடு காலியில் நடத்தப்படவேண்டுமென எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த மாநாட்டை கண்டியில் நடத்துவதனால் எந்தவித பயனும் கிடைக்கப்போவதில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்ட காலி மாவட்டத்தில் இந்த மாநாட்டை நடாத்துவதினால் பெருமளவான வெளிநாட்டு நிதியுதவிகளை பெற்றுக் கொள்ள முடியும்.

உதவி வழங்கும் நாடுகளின் உதவிகளை அதிகளவில் பெற்று பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் வழங்க வேண்டுமென்பதே எமது கட்சியின் பிரதான நோக்கம்.

எனவே பெருமளவான உதவிகளைப்பெற்றுக் கொள்வதற்காக எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள மாநாட்டை சுனாமியினால் பாதிக்கப்பட்ட காலியில் நடத்த வேண்டுமென்பதே எமது கோரிக்கைஎன ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

(இ-8)


## ஆன்மீக உரை



இடம்:
யாழ். இந்து மகளிர் கல்லூரி
காலம்:
25.04.2005 திங்கள் (இன்று) பி.ப. 3.45 மணி

வழங்குபவர்
பேராசிரியர் அனில்குமார்
(சத்தியசாயி உயர்படிப்பு பல்கலைக்கழகம் - புட்டபர்த்தி, பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் மொழிபெயர்ப்பாளர்)
கலை நிகழ்வும் இடம்பெறும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
மத்திய இணைப்பாளரும்,
வடபிராந்திய இணைப்புக் குழுவினரும்
பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனம், இலங்கை
(9537)



## தந்தை செல்வநாயகம்

28 வது நினைவு நாள்
அஞ்சலி நிகழ்ச்சி

காலை நிகழ்ச்சி
காலம்
26.04.2005
செவ்வாய்க்கிழமை
மு.ப. 9.30 மணி
இடம்
தந்தை செல்வா நினைவிடம்
தந்தை செல்வா சதுக்கம்,
யாழ்ப்பாணம்
சர்வமதப் பிரார்த்தனை



மாலை நிகழ்ச்சி
நினைவுப் பேருரை
காலம்
26.04.2005 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணி
இடம்
யாழ். வீரசிங்கம் மண்டபம்
நாதஸ்வர இசை
தலைமை
மேதகு ஆயர் அருட் கலாநிதி சு.செபநேசன் அவர்கள்
(தலைவர், தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழு)
நினைவுப் பேருரை
பேராசிரியர் சி.பத்மநாதன்
(வரலாற்றுத்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)
பொருள்
"இலங்கைத் தமிழரும் சுயாட்சி உரிமையும்"
நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்
தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு
(சி-1238)


# பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இரண்டாந் தவணைக்காக பாடசாலைகள் இன்று ஆரம்பமாகின்றன. எனினும் க.பொ.த. உயர்தர பரீட்சை மண்டபங்கள் அமைக்கப்படாத பாடசாலைகள் நாளை மறுதினம் புதன்கிழமையே ஆரம்பமாகும் என்று வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் வி.அருளானந்தம் தெரிவித்துள்ளார். (இ-101)

# கணனி மயப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி வாடிக்கையாளர்களுக்கு துரிதமாகவும் இலகுவானதுமான சேவையை வழங்குவதற்காக இலங்கை வங்கி யாழ். மேற்தரக்கிளை, ஸ்ரான்லிறோட் கிளை, திருநெல்வேலிக்கிளை ஆகிய மூன்றையும் நவீனமுறையில் கணனிமயப்படுத்தி (ICBS) ஓரேஇணைப்பின் கீழ் வாடிக்கையாளர்களுக்கு வங்கிச்சேவையை வழங்க முன்வந்துள்ளது.

நவீன முறையில் அமைந்த சேவை இன்று காலை 8.15மணிக்கு இலங்கை வங்கியின் யாழ்.மேற்தரக்கிளையில் ஆரம்பமாகவுள்ளது. (க.19)

## போர் நிறுத்த...

தலைவர்சட்டத்தரணி கா.சிவபாலன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் மகாசிவம், தேசியமனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவி செல்வி ராதிகா குமாரசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து ஆராயப்பட்டது.

மேலும் அரசின் பயங்கரவாதத் தடைச்சட்டம் குறித்தும் சிறைகளில் வாடும் தமிழ் இளைஞர் யுவதிகளின் நிலைமை குறித்தும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை மாநாட்டில் கலந்து கொண்ட ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் தொடர்பான விசேட பிரதிநிதி ஒலராஒட்டுண்ணு கருத்துத் தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சிறுவர்களை படையில் இணைத்துக் கொள்கின்றனர் என ஒருவரை ஒருவர் குற்றம் தெரிவிக்கிறார்களே ஒழிய சிறுவர்கள் எதிர்நோக்கும் ஏனையபிரச்சினைகள் தொடர்பாக குறிப்பாக அநாதைச் சிறுவர்கள் போசாக்கு குறைந்த சிறுவர்கள் அடிப்படைய வசதிகளை பெறமுடியாமல் உள்ள சிறுவர்களது நிலைமை தொடர்பாக அக்கறை கொள்ளவில்லை என அவர் குற்றம் சாட்டினர். (இ-19)

## புனித பீட்டர்....

உறுதிவழங்கினார்.

இந்த நந்நாளிலே தேவனை மென்மேலும் நேசிக்கும்படியாகத் தனக்காகப் பிரார்த்திக்குமாறு திருச்சபையின் விசுவாசிகளை பரிசுத்த பாப்பரசர் கேட்டுக்கொண்டார். அத்துடன் தேவன் மானுடன் ஒருவனையும் வழிநடத்தும்படியாக ஒருவரை ஒருவர் தாங்கிக்கொள்ளுமாறு பிரார்த்திக்குமாறு பாப்பரசர் தனது பிரசங்கத்தில் கேட்டுக் கொண்டார்.

1978 ஆம் ஆண்டு ஒக்டோபர் 22 ஆம் திகதி பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தனது பணிகளை ஆரம்பித்த போது கூறிய, அஞ்சாதே கிறிஸ்துவுக்காக வாயிலை அகலத்திறந்து விடுங்கள் என்ற வாசகங்களையும் புதிய பாப்பரசர் கூறத்தவறவில்லை.

சுமார் 3 மணித்தியாலங்கள் நீடித்த திருப்பலியைத் தொடர்ந்து வெள்ளைநிறத் திறந்த ஊர்தியில் பவனிசென்றவாறு புனித பீட்டர் சதுக்கத்தில் கூடியிருந்த விசுவாசிகளை பரிசுத்த பாப்பரசர் விசேடமாக ஆசீர்வதித்தார்.

பரிசுத்த பாப்பரசரின் பூர்வாங்கத் திருப்பலி பல்வேறு நாடுகளில் தொலைக்காட்சிகளின் மூலமாக நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(இ-4)

# பின்தங்கிய பிரதேச ஆசிரியர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவு மே மாதம்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து அறுநூறு ரூபா மேலதிகக் கொடுப்பனவு வழங்க கல்வி அமைச்சு முடிபு செய்துள்ளது.

2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இத்திட்டம் அமுலுக்கு வரும். கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கு இக்கொடுப்பனவு மே மாத சம்பளத்துடன் ஜனவரிமாதம் முதல் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவின் நிலுவையும் வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பின்தங்கிய பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்க வேண்டுமென அமைச்சரவைக்கு சிபாரிசு செய்திருந்தார்.அமைச்சரவை இத் திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-9)

# தலைவர் பிரபாவுக்கு கேடயம்

(கிளிநொச்சி)

நீர்வாழ் உயிர்வள ஆசிரியர் சங்கத்தால் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கு பாராட்டுக் கேடயம் வழங்கப்பட்டுள்ளது.

நீர்வாழ் உயிர்வள ஆசிரியர் சங்கத்தால் கடல்வள கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து வெளியேறிய ஆசிரிய மாணவர்களால் மேற்படி கேடயம் வழங்கப்பட்டது. இக்கேடயத்தினை நேற்று முன்தினம் காலை11மணியளவில் கிளிநொச்சியிலுள்ள கல்விக்கழக நடுவகப் பணியகத்தில் செங்கோட்டையன் கேட்போர் கூடத்தில் அரசியல் துறை துணைபொறுப்பாளர் சோ.தங்கன், கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஆகியோரிடம் நீர்வாழ் உயிர்வள தொழிநுட்ப செயலாளர் இ.வசந்தரூபன், ஆசிரியர் சங்கச் செயுலாளர் செ.தவரட்ணம் ஆகியோர் வழங்கினர்.

இப் பாராட்டுக் கேடயம் வழங்கும் நிகழ்விற்கு கடல்வள கற்கை நெறிப்பகுதி ஆசிரியர் பரமேஸ்வரன் தலைமை தாங்கினார், கருத்துரைகளினை வடமராட்சி கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஆகியோர் வழங்கினர்.

சிறப்புரையினை அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆற்றினார். இப்பாராட்டுக் கேடயம் வழங்கும் நிகழ்வில் கடல்வளக் கற்கை நெறியினை பூர்த்தி செய்த ஆசிரியர் மாணவர்கள் மற்றும் கல்விக்கழக துணைப்பொறுப்பாளர் வடமராட்சிக் கிழக்கு கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.(இ-4)

## அரசு பொதுக்...

அறிவிக்கப்படவும் இல்லை.

இந்நிலைமை பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது மேலும் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படமாட்டாது என்றதொரு உறுதிமொழி அரசின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பிக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதனாலேயே ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும இடையே பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட மாட்டாது என்று உறுதியாக கருத்து வெளியிட்டு வருகிறார் என்றும் புலித்தேவன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)


வள்ளுவர் அக்கடமி
பலாலி வீதி, உரும்பிராய்
O/L DAY CLASS
இன்று ஆரம்பம்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
(C-1239)

THE ROYAL COLLEGE OF JAFFNA
சுலபமானமுறையில் ஆங்கிலத்தில்
கதைக்கப்பழில By விக்னேஸ்வரன்
ஆச்சாரி 426(302), K.K.S வீதி
யாழ்ப்பாணம்; பிளாக் வீதி, சங்கானை
T.P:-0776751649
(9538)

















இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.